உ

குருபாதம்

ஞானசம்பந்தம்

மலர் 31 | விரோதிகிருது - மாசி - 10-3-72 | இதழ் 4

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே — சம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

பங்குனி உத்தர நாள்

'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்பது நம் நாட்டில் அனைவரும் அறிய வழங்கும் ஒரு பழமொழி. அது, 'தை மாதம் பிறந்தபின்புதான் வேளாண்மையின் பயன் கிடைப்பதால், அப்பொழுதுதான் வாழ்க்கைக்கு வழி பிறக்கும்' என்பதைத் தெரிவிப்பதாக எளிய வகையில் பொருள்கொள்வர். ஆயினும், அந்தப் பழமொழியின் பொருள் அந்த அளவில் நிற்பதாகாது. அற நெறியின் முதற்படியாகிய திருமணங்கள் பெரும்பாலும் தை பிறந்த பிறகே செய்யப்பெறுகின்றன. அதனால், மக்கள் தாம் எடுத்த பிறவிப்பயனைப் பெறுவதற்குரிய வழி பிறப்பது தை பிறந்த பிறகே என்பது விளங்குகிறது.

இதனினும் மேலாக மக்கட் பிறப்பின் பயனை அடைவதற்கு வழியாக உள்ள இறைவன் திருவிழாக்கள் பலவும்

உத்தராயணத் தொடக்கமாகிய தை மாதத்திற்குப் பின்பே எல்லாக் கோயில்களிலும் பெரும்பான்மையாக நிகழ்கின்றன.

" மண்ணினிற் பிறந்தார் பெறும்பயன் மதிசூடும்
அண்ணலா ரடியார்தமை அமுதுசெய் வித்தல்,
கண்ணினால் அவர் நல்விழாப் பொலிவுகண் டார்தல்."

என்னும் 'சேக்கிழார்' திருவாக்கினால் மக்களாய்ப் பிறந்தோர் பெறத்தக்க பெரும்பேறு, சிவபெருமானது திருவிழாக்களைக் கண்டு வணங்குவதே என்பதைத் தெளிவாக அறிகின்றோம். அந்த ஒரு நல்வழி நமக்குப் பிறப்பது தை பிறந்த பின்புதான் என்பது உண்மையாகின்றதன்றோ! இத்தகைய திருவிழாக்களில் அண்மையில் வர இருப்பது பங்குனி உத்தரப் பெருவிழா.

மண்ணினிற் பிறந்தார் பெறும்பயனைச் சேக்கிழார் அறுதியிட்டுரைத்த திருவாக்கிற்கு மூலமாய் உள்ளது திருஞானசம்பந்தரது பூம்பாவைத் திருப்பதிகமே. அத்திருப்பதிகம் எலும்பைப் பெண்ணாக்கிய அற்புதத்தைச் செய்தது என்பது யாவரும் அறிந்தது. மயிலாப்பூரில் சிறந்த வணிகர் பெருமகனாக இருந்த 'சிவநேசர்' என்பார், ஆளுடைய பிள்ளையாரிடத்துத் தமக்கிருந்த அளவிலா அன்பினால், தாம் அரிதில் தவம் செய்து பெற்ற 'பூம்பாவை' என்னும் மகளை அவருக்கே கொடுக்க உறுதி பூண்டிருந்தார். திருவருட்குறிப்பு அதற்கு ஒத்திராமையாற்போலும், அம்மகள் பூக்கொய்யச் சென்ற இடத்தில் அரவு தீண்ட உயிர் நீத்தாள். அதனால் பெரிதும் வருந்திய சிவநேசர் அவளை எரிப்படுத்திய எலும்பையும், சாம்பலையும் ஒரு குடத்திற் சேமித்து, மகளை உபசரித்தது போலவே உபசரித்து வைத்திருந்து, பிள்ளையார் திருமயிலைக்கு எழுந்தருளியபொழுது அவர் திருமுன் கொணர்ந்து வைத்து வணங்கினார். பெற்ற தந்தையார் மனம் மகிழும் வண்ணம் பூம்பாவையை உயிர்ப்பித்துத் தரத் திருவுளங்கொண்ட பிள்ளையார், அது வாயிலாக ஒரு பேருண்மையை உலகிற்கு உணர்த்தக் கருதி, "மட்டிட்ட புன்னையங் கானல் மடமயிலை" என்னும் திருப்பதிகத்தை எடுத்து. அதில் சிவபெருமானுடைய திருவிழாக்கள் பலவற்றையும் எடுத்து ஓதி, 'இவைகளைக் காணாமலே போகின்றாயே பூம்பாவையே, நீ பிறந்து பயன் என்னை' என்பதாக அருளிச்

செய்தார். அத்திருப்பதிகத்தின் கருத்தையே சேக்கிழார் திரட்டிக் கூறியருளினர்.

பூம்பாவைத் திருப்பதிகத்தில் ஞானசம்பந்தர் எடுத்தோதிய விழாக்களில் பங்குனி உத்தர நாளும் ஒன்றாகும். இது, பஞ்ச பூதத் தலங்களில் பிருதிவித் தலமாகச் சொல்லப்படும் திருவாரூர், காஞ்சி என்னும் இரு தலங்கட்கும் சிறப்பாக உரியதாய் விளங்குகின்றது. திருவொற்றியூரில் சங்கிலியாரை மணந்து எழுந்தருளியிருந்த சுந்தரர், திருவாரூர் உத்தரப் பெருவிழாவை வணங்காதிருக்க இயலாதவராய்த் தாம் செய்த சூளினையும் கடந்து திருவாரூர் நோக்கிப் புறப்பட்டு, அது காரணமாக இழந்த கண்களில் இடக்கண்ணைக் காஞ்சியை வணங்கிப் பெற்றதும், பின்பு திருவாரூரை அடைந்து மற்றொரு கண்ணைப் பெற்றதும் நினைக்கத்தக்கன.

காஞ்சி உத்தரப் பெருவிழா, முப்பத்திரண்டறங்களையும், சிவபூசையையும் இடைவிடாது செய்திருந்த அம்பிகையை இறைவன் திருமணங்கொண்ட மணவிழாவாக நிகழ்வது. திருவாரூரில், அமரர் நாடாளாதே ஆரூரை ஆண்டு எழுந்தருளியிருக்கும் வீதி விடங்கப் பெருமான் அஜபா நடனத்துடன் வீதியுலாப் போந்தருளும் காட்சியாக நிகழ்வது. வீதிவிடங்கப் பெருமானது அஜபா நடனக் காட்சியைக் காணாதிருக்க இயலாதவராகியே சுந்தரர் தமது சூளினையும் கடந்து புறப்பட்டார்.

இவ்விரு தலங்களன்றிப் பிற தலங்களிலும் இப்பங்குனி உத்தரப் பெருவிழா, 'உருத்திரபாத தீர்த்தவிழா' எனக் கொண்டாடப்பெறுகின்றது. ஞானசம்பந்தரது திருப்பதிகத்தால் இது திருமயிலையில் சிறந்து விளங்கியதாக அறிகின்றோம். தருமையாதீனத்தின் பரிபாலனத்தில் உள்ள வேளூர் ஸ்ரீ தையல்நாயகி சமேத ஸ்ரீ வைத்தியநாதஸ்வாமி கோயில் திரிபுவனம் ஸ்ரீ அறம்வளர்த்தநாயகி சமேத ஸ்ரீ கம்பகரேஸ்வரசுவாமி கோயில் முதலியவற்றிலும் உருத்திரபாத தீர்த்தப் பெருவிழா மிகச் சிறப்பாக நிகழ்வது. இவ்விழாக் காலங்களில் அன்பர்கள் இச் சிவதலங்களை, அடைந்து இறைவன் நல்விழாப் பொலிவைக் கண்டு களித்துப் பெரும் பயன் பெறுவார்களாக.

ஆனிடத்தைந்தும் ஆடும் அரன்பணி

தருமையாதீனப்புலவர், மகாவித்துவான்.
திரு. ச. தண்டபாணி தேசிகர்

சென்ற கட்டுரையிலே,

கருணைக் கடலாகிய முருகப்பெருமான், 'தேயங்களுட் சிறந்தது முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானை உணர்ந்து உய்யும் நெறியை ஆராய்கின்ற தேயமே பிறப்பு இறப்புப் பிணி மூப்புக்கள் இன்றி அநாதியாய் – அளவிலாற்றலதாய் – காரணமில்லாக் கருணையினலே ஆன்மாக்களை யிடேற்ற வல்லதாய் விளங்கும் பரசிவமே பரம்பொருள்; அங்கியிற் சூடுபோலவும் மலரில் மணம்போலவும் – நீரில் தண்மை போலவும் விளக்கில் ஒளிபோலவும் சிவபரம்பொருளைப் பிரியாது நின்று, பரிபாகமுற்ற ஆன்மாக்களினிடமாகக் கண்ணடியுள் ஒளிபோலக் கலந்து இன்பமூட்டுவதே திருவருள்; திருவருளே சத்தி; சிவ சத்தி வடிவாகிய சீபஞ்சாக்கரத்தை விதிப்படி இடைவிடாது நினைந்திருத்தலே சிவத்தியானம்; சிவத்தியானம் நிலைத்திருக்கச் செய்தலே சிவபூசை. சிவமந்திரம் சிவபூசை இவைகளைப்பற்றி அறிய அவசரப்படுபவனே சிறந்த மாணுக்கன்; அத்தகைய மாணுக்கனுக்கு அறிவிப்பதே ஆசிரியன் கடமை; ஆதலால் அகத்தியனே உனக்குச் சிவபூசையைப் பற்றித் தெரிவிக்கிறேம் கேட்பாயாக' என்று கூறத் தொடங்கினர் என்ற அளவு சிந்திக்கப்பெற்றது. அதன்பின் அப்பெருமான் அருளிச்செய்கின்றூர்.-

சிவபூசைக்கு வேண்டிய சாதனங்களிற் சிறந்தன சிலவற்றைக் கூறுகிறேன் கேள்! பசுவினிடம் உண்டாகும் ஆறு பொருள்களும் அரன் பூசைக்கு இன்றியமையாதன - மிகச் சிறந்தன.

ஒரு காலத்திலே தேவர்கள் சாவா - மூவா நிலையைப்பெற விரும்பினர்கள். இன்ப ஆசை யாரைவிட்டது? ஏதோ பசு புண்ணிய வசத்தால் பதவியைப் பெற்றுவிட்டோம். பெற்ற பதவி சில்லாண்டில் மாண்டுபோவதாற் பயனென்ன? எடுத்த

இவ்வுடம்போடு இந்தப் பதவியிலே எண்கடந்த யாண்டுகள் வாழவேண்டும் என்று விரும்பினர்கள். மந்தரமலையை மத்தாக இட்டு வாசுகியை நாணகக்கட்டிப் பாற்கடலைக் கடைந்தார்கள். தொழிலுக்கு மட்டும் துணையாக அசுரர்களையும் கூட்டிக்கொண் டார்கள், அமுதம் வெளிப்படுகிற நேரத்திலே பாற்கடலிலே இருந்து வெள்ளையானை, குதிரை, இலக்குமி, கௌஸ்துபமணி, கற்பக விருட்சம், காமதேனு முதலான அரியபொருள்கள் பல தோன்றின. தத்தம் தகுதிக்கும் விருப்பத்திற்கும் ஏற்பத் தேவர் களே அவைகளைப் பங்கு போட்டுக்கொண்டார்கள்.

காமதேனுவோடு கன்மபூமியில் வாழும் மக்களுக்கென்று சிவபெருமான் திருவருளாலே நந்தை, பத்திரை, சுரபி, சுசீலை சமனை என்ற ஐந்து வகையான பசுக்கள் தோன்றின. அவை களை இறைவன் மண்ணுலகிலே வாழும் மக்கள் பெறுவார்களாக. அவைகள் தரும் பால், தயிர், நெய், கோசலம், கோமயம், கோரோ சனை யாகிய ஆறு பொருள்களும் சிவபூசைக்கும், வேள்வி முதலிய பசு புண்ணியங்களுக்கும் பயன்படுவதாகுக எனத் திருவுளம்பாலித்தார். அப்பசுக்கள் மண்ணுலகில்வர, இனம் பெருகி எங்கும் வளர்ந்தன. ஆதலால் பசுக்கள் தரும் ஆறு பொருள்களும் மிகத் தூய்மையானவை; அகத்திய, இவை யின்றி இறைவனைப் பூசித்தல் கூடாது. இன்னுங்கேள்.

கோசலம் என்பது பசுவின் சிறுநீர்; இதனை மனிதன் உண் டால் செல்வம் பெருகும்: கோமயம் என்பது பசுவின் சாணம்; இதனல் எல்லாவகையான நோயும் நீங்கும். பாலுக்குப் பகை யழிக்கும் வன்மையுண்டு. தயிருக்கு மகப்பேறுண்டாகும். நெய்யை யுண்ணின் மக்களனைவராலும் போற்றப்பெறும் ஒளி யுண்டாகும்; கோரோசனை ஆயுளை வளர்க்கும்- இவைகளை இறைவனுக்கு என்று பூசைக்கு முதலில் விதிப்படி அளவாகக் கலந்து மந்திரித்துச் செபம் செய்து ஆட்டினலும் உண்ட பயனில் ஆயிரங்கோடி அதிகமான பயன்களை யடையலாம். ஆதலால் ஐயப்படாமல் இறைவற்கு ஆட்டுக. அருவருப்பின்றி அருந்துக.

கோமயத்திலிருந்து வில்வந்தோன்றியது ; வில்வத்தளிசில் திருமகள் என்றும் வாழ்கிருள். அதனல் வில்வத்திற்குச் சீபலம் (ஸ்ரீபலம்) என்றும் பெயருண்டு. அதனல் இதனைக் காலவேறு பாடு இன்றி எக்காலமும் சாத்தலாம்.

வில்வந்தோன்றிய பிறகு நீலோற்பலக் கிழங்கு தாமரைக் கிழங்கு முதலானவையும் கோமயத்திலிருந்து உண்டாயின.

இவைகளும் அருச்சனைக்கு ஏற்றன. அஷ்ட புஷ்பம் எனப் பெறும் எட்டுவகைப் பூக்களில் தலைசிறந்தன. பெருமானுக்கு உகப்பாயின.

இவ்வாறே கோசலத்தினின்று குங்கிலியம், சாம்பிராணி, அகில், குக்கில், தேவதாரு முதலான தூபமிடும் பொருள்கள் தோன்றின.

பாலிலேயிருந்து அனைவருக்கும் உணவாகும் செந்நெல் வகைகள் தோன்றின. அதனாலேயே நெல்லில் விரவிநிற்கும் புரதச்சத்தைப் பாலென இன்றும் வழங்குகிறோம். தயிரிலிருந்து சந்தனம் முதலான மங்கலப் பொருள்கள் தோன்றின. வெண்ணெயிலிருந்து அமுதம் தோன்றியது. கோரோசனையிலிருந்து எண்வகைச் சித்திகளும் தோன்றின. ஆகையால் இவைகளைக் கொண்டு இறைவனை யாட்டிப் பணிந்தால் இவைகளைச் சாத்திய புண்ணியமும் உடன் விளையும்.

இங்ஙனம் ஆனிடத்தவைகளை ஆட்டிப் பின்னர் இளவெந்நீர், நெல்லிக்காப்பு, மாக்காப்பு, மஞ்சட்காப்பு திரவியப்பொடி. இளநீர், பஞ்சாமிர்தம், பழச்சாறுகள், பன்னீர், சந்தனம், இவற்றால் ஆகமங்களில் விதித்த முறை தவறாமல் மந்திரங்களுடன் நீராட்டுதல் வேண்டும்.

தயிர் ஆட்டும்போது, தயிரில் பால் காயாமையால் நூலிழையும் தயிர், புளித்ததயிர், திரிந்ததயிர், சீண்டு மொச்சை நாறுந்தயிர் முதலான குற்றங்கள் இருத்தலாகாது

அங்ஙனமே நெய்யில் இளங்காய்ச்சல், முறுகக்காய்தல், தீநாற்றமுடையது இவைகளை அபிடேகித்தலாகாது.

ஈன்ற சூதகம் கழியாத பசுவின்பால், கருவுற்ற பசுவின்பால், முதிர்கன்றின்பால், நோயுற்ற பசுவின்பால், உண்ணத்தகாத உணவுகளை உண்ட பசுவின்பால் இவைகளை இறைவற்கு ஆட்டுதலாகாது.

இறைவனைத் தூயநீரால் ஆட்டித் திருவொற்றாடையிட்டுத் திருமேனியீரம் புலர ஒற்றி, கோரோசனை, சந்தனம், குங்குமப்பூ, பச்சைக்கற்பூரம், புனுகு, சவ்வாது, கத்தூரி முதலிய கலந்த கலவைச் சந்தனத்தைக்கொண்டு திருமேனி முழுதும் பூசிப் பொட்டிட்டு வணங்குக.

தாமரை, நீலம், முல்லை, மல்லிகை முதலான மணமுள்ள பூக்களாலும், மரு, மருக்கொழுந்து, சிவகரந்தை, மாசிப்பச்சை, திருநீற்றுப்பச்சை, வில்வம், துளசி முதலிய மணமுள்ள இலை களாலும் அருச்சிக்க.

பின்பு ஐவகை உபசாரம், பத்துவகை பதினறுவகை யுபசாரங்களைச் செய்க. பிறகு தோத்திரிக்க. இங்ஙனம் விதிப்படி அரன்றனைப்பூசித்தால் இம்மையில் வாராத செல்வம் அனைத்தும் வரும். தீராத வல்வினைநோய் தீரும். பிறவித்துயரும் நீங்கும். பேரின்பப்பேறுண்டாம்.

ஆதலால் தருமங்களுட் சிறந்தது சிவதன்மமே. சிவதன்ம மாவது சிவபூசையே. ஆகவே சிவபூசையைச்செய்து சிவனது சீபாதமலரைச் சேர்ந்து இன்பமுடன் வாழ்க. எனக்குமாரக் கடவுள் அகத்தியமுனிவருக்கு அறிவித்தருளுகின்றார்.

சிவபூசையைச் செம்மையாகச் சிரத்தையுடன் அன்புடன் செய்தால் சிவஞானம் சித்திக்கும். சிவஞானம் சிவபூசையாற் கிடைப்பதாயினும் சிவாநுபூதியிற் சிறந்த ஆசான்மூலமாகப் பெறுதல்வேண்டும். அலரும் பருவத்திலுள்ள அரும்பு வண்டு ஊதமலருவதுபோலபக்குவமுகிய மாணவகன், ஆசாரியனுடைய மொழியாலும் விழியாலும் மலர்கிருன். ஞானத்தேன் சுரக்கிருன். அங்ஙனம் ஆசாரியன் சிவஞானதானம் செய்து சிவஞானம் பெறுவிக்கும்முறைகளை முருகப்பிரான் அகத்தியருக்குச்சொல்லத் தொடங்குகிருர்.

பரம தருமாதியியல் முற்றும்.

3 ஆவது சிவஞான தான இயல் :

சிவஞானம் என்பது சிவஞானத்தை யறிவிக்கும் ஞானநூல்களாம். அவைகளைப் போதக ஆசாரியன் மக்கள்மீதுவைத்த கைம்மாறு வேண்டாத கருணையால் அவர்களுக்கு இயல்பாகவே யுள்ள அறியாமையாகிற இருள் நீங்கும் வண்ணம் திருவருள் பாலிப்பன். அவன் அருள்பாலிக்கும் முறைகளை உமக்கு உபதேசிப்போம். கேட்பாயாக என்று முருகப்பெருமான் மொழிந்தருளுகின்றார் !

அகத்தியமுனிவனே ! பரிபாகமுற்ற உயிர்களுக்கு ஆகாமியம் சஞ்சிதம் என்னும் கன்ம வகைகளும், ஆணவவலியும் மாயையின்கட்டும், அந்த மாயையில் உண்டாகிய உடல் உலகம்

முதலான கட்டுக்களும் கெடும்படிச் சிவஞானத்தைப் பற்றிச் சொல்வோம் கேட்பாயாக!

வித்தைகட்கெல்லாம் முதலாயது ஞானமே; வித்தை வடிவானதும் ஞானமே; ஒளியாயிருப்பதும் அதுவே; உயிர்கட்குயிராயதும் அதுவே; சிவனுர்க்குத் திருமேனியும் அதுவே; பக்குவான்மாக்களுக்குத் தீபம்போல ஒளி தருவதும் அதுவே; ஆதலால் அதனைப்பற்றிச் சொல்வோம் கேள்!

ஆசாரியன் ஞானசாத்திரங்களை மலிவாக மக்கள் அனைவருக்கும் உபதேசித்தலாகாது, மக்களுக்குள் எவன் பரிபாகமுற்றவனோ - மூர்த்தி தலம் தீர்த்தங்களை முறையாகக் கண்டவனோ - எவன் அன்பும் ஆர்வமும் உடையவனோ - எவன் குரு சொன்ன குறிப்பின்படி நடப்பவனோ அவனுக்குத்தான் உபதேசிக்க வேண்டும்.

ஆசிரியனை அவமதிப்பவன், உள்ளன்பு இல்லாதவன் ஆசிரியனிடம் குறைகாண்பவன், குறைசொல்பவன், தானங்களாலும் வணக்கங்களாலும் அன்பு செலுத்தாதவன், தன் ஆசாரியனைவிட அயலானை மதிப்பவன் இவர்களுக்கு ஒரு போதும் ஞானதானம் செய்தலாகாது. ஒருக்கால் ஆசாரியன் அச்சத்தாலோ - பொருள் நசையாலோ இத்தகையோர்க்கு உபதேசிப்பனுயின் இவனல் உபதேசிக்கப்பெற்ற ஞானம் மாணவகனுக்குப் பயன்தராது. ஆகையால் சிவஞானத்தை அவரவர்கட்குத் தெரிந்த மொழியாலும் சிறப்பாக வடமொழியாலும் உபதேசிக்க.

சிவஞானம் என்பது சிவஞானத்தையுணர்த்தும் நூல்களை. அது பரிபாகமில்லாத உயிர்களால் உணர்தற்கு அரியது; மக்களுக்கு இயல்பாகவேயுள்ள அறியாமையால் வினையும் ஐயமும் திரிபுமாகிய இருள் நீங்க அன்புள்ளத்தாலும் அருளுள்ளத்தாலும் உபதேசிப்பர். இதுவே ஞானதானம் எனப்படுவது. அதனை அவன் உபதேசிக்கும் முறைகளை உரைப்போம்; கவனமாகக் கேட்பாயாக.

மாணக்கன் ஆசாரியனைச் சிவனெனவே தெளிந்து உபதேசம் கேட்கவேண்டும். பரிபாக முற்றவனுக்குபதேசித்த ஆசாரியன் சிவபெருமானைப்போலவே எண்குணம் படைத்தவன் ஆவன். அபக்குவர்கட்கு அறிவித்தவன் நெடுநாள் நரகிடைப்பட்டு வருந்துவன்.

நல்ல மாணுக்கர்க்கு ஆசாரியன் உபதேசிக்காத வண்ணம் இடையூறு விளைவிப்பவனும், எப்போதும் வாதம் செய்து உபதேசத்திற்கு இடையூறு செய்பவனும், சொல்லுறுதியில்லாதவனும், மறதியுடையவனும், இழிசெயலுடையவனும் ஆகிய இவர்கள் பரிபாக முருதவர்கள். இவர்கட்கு ஆசாரியன் ஞான நூல்களைப் போதித்தல் கூடாது.

தன்னின் உயர்ந்த சாதியிற் பிறந்தோன், இத்தகையர் என அறியப்படாதவன், கற்றதனுலாய பயனை எய்தாதவன், பொய்யர், ஒலி இசை இவற்றின் வேறுபாடறியாதவன் ஆகியவர்களை ஆசிரியன் உடனே நீக்குதல் வேண்டும்.

ஞான சாத்திரங்களைப் பொன்னுக்கும் பொருளுக்கும் புகழுக்குமாக விற்றலாகாது. அங்ஙனம் பொருள் பெற்று ஞான சாத்திரங்களைப் போதிப்பனுயின் அவ்வாசாரியன் அனந்த கோடிகாலம் நரகத்துள் ஆழுவான்.

பிறப்பைப்பிணி என்றும், உடலை நோயென்றும் கருதி பிறப்பறுக்க முயலவேண்டும் என்ற பரபரப்பையுடைய மாணுக்கர்க்கே ஆசாரியன் சிவஞானுேபதேசம் செய்தல் வேண்டும்.

சிவபெருமான் இத்தகைய ஆசானையேயிடமாகக் கொண்டு அதிட்டித்து நின்று சீடனுடைய மலமாயாகன்மங்களைத் தீட்சையினுலே அறுத்து, சுட்டுப்போக்கி ஞானுேபதேசம் செய்வன்.

ஞானுசாரியன் தங்குலத்தில் கிடைக்க வில்லையாயின் கீழ்க் கீழ்க் குலத்துள்ளோரையும் கொள்ளலாம். அரசன் தன் குலத்தோர்க்கும் கீழ்க்குலத்தோர்க்கும் அந்தணர்க்கும் உபதேசிக்கலாம். இங்ஙனமே ஏனைய குலத்தவரும் ஒத்த குலத்தோருக்கும் தாழ்ந்த குலத்தோருக்கும் உபதேசிக்கலாம். உயர்ந்த குலத்தோர்க்காயின் அவர்கள் குலத்து ஆசாரியன் இல்லையாயின் உபதேசிக்கலாம்.

சிவாகமங்களையும், சிவாகமசாரமான புராணங்களையும் தானம் செய்வதும் சிவஞானதானமாகும்.

இங்ஙனம் சிவஞானதானம் செய்யும் ஆசாரியனைச் சிவனுகவே பாவித்து மாணுக்கன் வழிபடக்கடவன். குருவையும் - சிவாகமங்களையும் தூபதீப முதலான அளித்து வழிபடக்கடவன்.

தூபங்களாவன :- குந்துருக்கம், சூடம், பச்சைக்கற்பூரம், வயிரம் பாய்ந்த அகில், வெண்சந்தனம், கருஞ்சீதாரி என்பனவாம். இவற்றைப் பொடி செய்து தூபமிடுதல் வேண்டும். தூபத்தால் ஞானம் வளரும். (வளரும்)

திருவருட்பயன் விளக்க உரை

(மலர் 31, இதழ் 2, பக்கம் 144- இன் தொடர்ச்சி)

நான்காவது குறள்

" பொய்யிருண்ட சிந்தைப் பொறியிலார் போதமாம்
மெய்யிரண்டுங் காணார் மிக "

எனவரும்.

இதன் பொருள்:- பொய் இருண்ட சிந்தைப் பொறியிலார் - இல்லது போல நிற்பதாகிய ஆணவமல மறைப்பால் அறியாமையே வடிவான அறிவினை யுடையராகிய பக்குவம் இல்லாதவர்; போதம் ஆம் மெய் இரண்டும் - அந்த ஞானமும், ஞானமேயான குருவடிவும் ஆகிய இரண்டனையும்; மிகக் காணார் - முற்றவும் அறிய மாட்டார்.

விளக்க உரை :- 'ஆகவே, அவர்கட்கு அவ்விரண்டனது மெய்ம்மையும் விளங்கமாட்டா என்பதாம். " பொய் இருண்ட " என்றது, வினையொடு தொக்க மூன்றுவதன் தொகை. பொய் - பொய்ப் பொருள்; ஆகுபெயர். புலனுகாமையால் பொய்ப்பொருளோடு ஒத்தல் பற்றி ஆணவ மலத்தை, " பொய் " என்றூர். " பொய்யிருள் கடிந்த மெய்ச்சுடரே " * எனத் திருவாசகத்தும் வந்தது. பொறி - நல்லூழ்; அஃது இங்குத் திருவருளைப்பெறும் பக்குவத்தைக் குறித்தது. " ஆம் மெய் " என்பதனை, 'அதுவேயாம் மெய்' எனவேருக எடுத்துக்கொண்டு உரைக்க.

இதனுல், ஞாஞசிரியரது பெருமை, சத்திநிபாதற்கன்றி அறியலாகாமைக்குக் காரணம் கூறப்பட்டது. அதனுனே ஞானம் அவர்கட்கு எய்தாமையும் உடன் உணர்த்தப்பட்டது.

ஐந்தாவது குறள்

" பார்வையென மாக்களைப் பற்றிப் பிடித்தற்காம்
போர்வையெனக் காணு புவி "

எனவரும்.

*கோயில் திருப்பதிகம் 3.

இதன் பொருள் :- பார்வை என - காட்டில் உள்ள விலங்குகளைக் கைப்பற்றித் தம்முடையனவாகச் செய்துகொள்ளுதற்கு வாயிலாக வேடர் பழக்கி வைத்திருக்கும் 'பார்வை விலங்கு' எனப்படும் அவ்வவ்வினத்து விலங்குகள் போல; மாக்களைப்பற்றி பிடித்தற்கு ஆம் போர்வை என - பக்குவான்மாக்களைத் தனக்கு ஆளாகக் கொண்டு தன்பால் அடக்கிக்கொள்ளுதற் பொருட்டு இறைவன் தன்னை மறைத்துக்கொண்டுவரும் வடிவமே என்று, புவி காணு - உலகத்தவர் ஞான குருவின் உண்மையை இவ்வாறு உணர மாட்டார்.

விளக்க உரை :- இங்குக் கொள்ளப்பட்ட பாடம், நிரம்ப அழகிய தேசிகர் கொண்டதாகும், உவமைக்கும் ஏற்புடைத்தாக 'ஆன்மாக்கள்' என்பதனைத் தலைக்குறையாக ஓதினர்.

பார்வை விலங்குகள் தோற்றத்தால் ஏனை விலங்குகளுள் ஒன்றாய் நின்று அவற்றை அழைக்குமாயினும், அவை உண்மையான் அவற்றுள் ஒன்றாகாது வேறாதல் போல, ஞானகுருவும், தோற்றத்தால் நம்மனோருள் ஒருவனாய் நின்று நம்மோடு அளவளாவினும், உண்மையான் அவன் நம்மினும் வேறானவனே என்பதாம். இவ்வுவமையானே, குருவடிவம் பக்குவான்மாக்கள் அச்சமின்றி அணுகுதற்கு வாயிலாதலும் உணர்த்தப்பட்டது.

இதனால், குரு சிவமேயாதல், உவமை யளவையின் வைத்துத் தெளிவிக்கப் பட்டது. இதனானே 'மானைக்காட்டி மானைப்பிடித்தல் போல' என்னும் வழக்கின் பொருளை இனிதுணர்ந்துகொள்க. மான் - மா; காட்டுவிலங்கு.

ஆறுவது குறள்.

> "எமக்கென் எவனுக் கெவைதெரியும் அவ்வ
> தமக்கவனை வேண்டத் தவிர்"

எனவரும்.

இதன் பொருள் ,- எவனுக்கு எவை தெரியும் - எவன் ஒருவனுக்கு எவை தெரியுமோ; அவ்வ தமக்கு அவனை [வேண்ட - அவை தமக்குத் தெரிதற் பொருட்டு அவனது துணையை வேண்டி நிற்றல் எவ்விடத்தும் உள்ள இயல்பாக; எமக்கு தவிர் என் - ஞானத்தை உணர விரும்பும் எமக்கு, ஞானகுருவின் துணையைத் தவிர்தல் என்னும்!

விளக்க உரை :- 'என்னும்' என்றது, 'பேதைமையாம்' என்றபடி. 'அவ்' என்னும் வகரஈற்றுப் பெயர், அகரம் ஏற்றி ஒற்று விரிக்கப்பட்டது. 'அவை' எனப் பாடம் ஓதி, 'அவ்வை' என்பது விரித்தலாயிற்று' எனினும் ஆம். தவிர், முதனிலைத் தொழிற்பெயர். இதனைப் பூட்டு வில்லாக, மேலே கூட்டி உரைக்க.

யாதோர் அறிவையும் அதனைப் பெற்றுடையோரால் பெறுதலே உயிரினது இயல்பு என்பது கண்கூடாயிருக்க, பேரறிவாகிய மெய்யுணர்வு, ஆசானை இன்றியே பெறப்படும் என்றல் அறியாமை' என்பது இக் குறளின் தெளிபொருள். எனவே, ஆசானையின்றிப் பெறப்படும் உணர்வு திரிபுணர்வாய்க் கேடு பயப்பதாதல் பெறப்பட்டது.

இதனால் திருவருட் பேறு அருளாசிரியனை யின்றி அமையாமை கூறப்பட்டது.

ஏழாவது குறள்

'விடம்நகுலம் மேவினும்மெய்ப் பாவகனின் மீளுங்
கடனிலிருள் போவதிவன் கண்.

எனவரும்.

இதன் பொருள் :- விடம் - பாம்பு தீண்டியதனால் தலைக்கு ஏறிய நஞ்சு; நகுலம் மேவினும் மெய்ப் பாவகனின் மீளும் கடனில் - பாம்பிற்குப் பகையாய் அதனை அழிக்கவல்ல கீரிதானே வந்து பாம்பு தீண்டப்பட்டவனது உடலின்மேல் விழுந்து புரண்டாலும் மீளாது, மந்திரத்தால் தன்னைக் கீரியாகப் பாவிக்கவல்ல மாந்திரிகனால் மீளும் முறைமை போல; இருள் போவது இவன் கண் - மல இருள் நீங்குவது உள் நிற்கும் சிவனலன்றிச் சிவமேயாய் நிற்கும் குருவின் திருநோக்கத்தாலாம்.

விளக்க உரை :- "மேவினும்" என்பதன்பின், 'மீளாது' என்பது எஞ்சி நின்றது. "இவன்" என அண்மைச்சுட்டாற் கூறியது அதிகார வரவு பற்றி. 'கண்ணால்' என்னும் உருபு தொகுத்தலாயிற்று. 'கண்' என்பதனை உருபாக்கி, 'உருபு மயங்கிற்று' என்றலும் ஆம்.

"எவனுக்கு எவை தெரியும், அவ்வ தமக்கு அவனை வேண்ட" என மேற்கூறியது, உணர்த்துவாரும் உணர்வாரும் தம்முள்

வேறு வேறு நிற்பார்க்குப் பொருந்துவது; ஈண்டு உணர்த்துவோன் சிவனே யாதலானும், அவன் உணர்வதாகிய ஆன்ம அறிவினுள் வேற்றுமை யின்றிக் கலந்து நிற்றலானும் வேறு குரு இன்றியே ஞானத்தை உயிர் உணர்தல் கூடுமன்றே என்னும் ஐயம், இதனல் உவமையில் வைத்து நீக்கப்பட்டது. கருட பாவனைபோல இங்கு இப் பாவனையைக் கூறினர்.

எட்டாவதுகுறள்.

“ அகலர்த் தருமருளை ; ஆர்க்கும்வினை நீக்கும் ;
சகலர்க்கு வந்தருளுந் தான் ”

எனவரும்.

இதன் பொருள் :- தான் - முதல்வன்; அகலர் - மாயா பந்தம் இல்லாதவர்கட்கு; அருளைத்தரும் ஆர்க்கும் வினை நீக்கும் - (குருவாகி வாராமலே) முன்பு உணராதிருந்த ஞானத்தை, உணராமை மாத்திரையே நீக்கி உணர்வித்தலும், நேரே பிணித்துள்ள வினைக்கட்டினை அறுத்து ஞானத்தை உணர்த்துதலும் செய்வன். சகலர்க்கு வந்து அருளும் - மாயாபந்தம் உடையவர்கட்குக் குருவாகிவந்து, முக்குண வடிவான கருவிகளின் வழியாகப் பிணித்துள்ள வினையை அக்கருவிகளைத் தூய்மைசெய்யும் முகத்தான் நீக்கி ஞானத்தை உணர்த்துவன்.

விளக்க உரை :- ‘கலை’ என்பது குணவடிவாகிய மாயையின் கூறுகளையே குறிப்பதாக வைத்து, ஆணவம் ஒன்றையே உடையவர்களையும், ஆணவம், கன்மம் இரண்டை உடையவர்களையும், ‘அகலர்’ என்றும், அவ்விரண்டோடு மாயையும் உடையவர்களை ‘சகலர்’ என்றும் ஆகமங்கள் கூறும் அவருள், ஆணவம் ஒன்றையே உடையவர்களை ‘விஞ்ஞானகலர்’ என்றும், ஆணவம் கன்மம் இரண்டை உடையவர்களை, ‘பிரளயாகலர்’ என்றும் கூறுதலும் ஆகமவழக்கு. ‘விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் என உயிர்கள் மூவகைப்படும் என்பது, உயிரவை நிலையுள்ளே * கூறப்பட்டது. ‘அகலர்க்கு’ என்பதில் குவ்வுருபு தொகுத்தலாயிற்று. “தரும், நீக்கும்” என்பன முற்றுக்கள். ‘ஆக்கும்’ என்பது பாடமாகாது. பின்னர் “வந்து” என்றமையால், முன்னர், ‘வாராது நின்றே’ என்பது பெறப்பட்டது.

இறைவன் ஆணவம் ஒன்றையே உடைய விஞ்ஞானகலர்க்கு அவர்தம் பக்குவத்தில் உள்நின்றே அஞ்ஞானத்தைப் போக்கி.

* குறள் 12.

மெய்ஞ்ஞானத்தை விளக்கியருள்வன்; ஆணவம், கன்மம் இரண்டை உடைய பிரளயாகலர்க்கு ஒரு முறை தனது இயற்கை வடிவத்துடன் (நாற்றோளும், முக்கண்ணும், கறை மிடறும் ஆகிய வடிவத்துடன்) முன்னின்று அருள்வழங்கி ஞானத்தை உணர்த்துவன்; இறைவன் அஞ்ஞானத்தைப் போக்கி மெஞ் ஞானத்தை அருளுவதே 'தீக்கை' (தீட்சை) எனப்படுகின்றது. அதனால், உள்நின்றும், முன்னின்றும் அருள்புரிதல் 'நிராதார தீக்கை. (ஆதாரத்தைப் பற்றாது செய்யும் தீட்சை) என்றும். குருமூர்த்தி வழியாக ஞானத்தை உணர்த்துதல் 'சாதார தீக்கை' (ஆதாரத்தில் நின்று செய்யும் தீட்சை) என்றும் சொல்லப்படு கின்றன. 'சகலருள்ளும் பக்குவ மிகுதியால் விஞ்ஞானகலர் பிரளயாகலரோடு ஒப்ப நிராதார தீக்கையால் ஞானம் பெறு வோரும் உளர்' என்பது, அறுபான் மும்மை நாயன்மாரது வரலாற்றால் அறியப்படும். விஞ்ஞானகலர் முதலிய மூவர்க்கும் முறையே தன்மை, முன்னிலை, படர்க்கை என்னும் வகையில் அருள்புரிவன் என்க.

இக் குறட்பாவிற்கு இங்கு உரைத்தவாறன்றிப் பிறவாறும் உரைப்பர்.

இதனால், 'முதல்வன் குருவாகிவந்து அருள்புரிதல் இவ் விடத்து' என்பது தெரித்துணர்த்தப்பட்டது.

ஒன்பதாவது குறள்.

" ஆரறிவார் எல்லாம் அகன்ற நெறிஅருளும்
பேரறிவான் வாராத பின் "

எனவரும்.

இதன் பொருள் :- அருளும் பேரறிவான் வாராத பின் - பாசத் தொடக்கை அறுத்து, ஞானத்தை அருளும் பேராற்றலை உடைய இறைவனே குருவாய் வாரானாயின்; எல்லாம் அகன்ற நெறி ஆர் அறிவார் - பாசம் எல்லாம் நீங்கின பின்பே விளங்குவதாகிய ஞானத்தை யாவர் உணர வல்லார்!

விளக்க உரை :- " ஆர் அறிவார் " என்ற வினா, ' 'அறிவார் ஒருவரும் இல்லை ' என்பதை விளக்குகின்றது. ஞானம் இயல் பாகவே பாசத்துட்பட்ட பிறரால் அறியவாராது என்றற்கு, " எல்லாம் அகன்ற நெறி " என உடம்பொடு புணர்த்துக் கூறி னார். நெறி, இங்கு வீட்டிற்கு நேரே வாயிலாகின்ற ஞானம்.

பாசங்களின் ஆற்றல் அறிவில்லன ஆகலின், அவற்றை அறிவே வடிவானவன் இருளை நீக்குகின்ற கதிரவன் போல நீக்குவான் என்றற்கு, "பேரறிவான்" என்ருர். "வாராதபின்' என்பது, வினையெச்சமாகிய ஒரு சொல். இறைவன் குருவாகி வந்து ஆறு அத்துவாக்களையும் சோதிக்கின்ற அத்துவ சோதனையால் பாசத்தை நீக்கிப் பின் ஞானத்தை உணர்த்துவன் என்க.

இதனுல், நல்லாசிரியனுலன்றிப் பிறரால் ஞானம் உண்டாகாமை கூறப்பட்டது.

பத்தாவது குறள்

"ஞானம் இவனெழிய நண்ணியிடும், நற்கலனல்
பானு ஒழியப் படின்"

என வரும்.

இதன் பொருள் :- நல் கல் பானு ஒழிய அனல் படின் - நல்ல சூரிய காந்தக் கல்லினிடத்துச் சூரியன் இன்றியும் நெருப்புத் தோன்றுதல் உளதாயின் ; இவன் ஒழிய ஞானம் நண்ணியிடும் - நல்லாசிரியன் இன்றியும் ஞானம் சிலர்க்குக் கிடைத்துவிடும்.

விளக்கம் :- 'சூரிய காந்தக் கல்லிடத்துச் சூரியன் இன்றி நெருப்புத் தோன்றுதல் கூடாமை போல, ஞானகுரு இன்றி ஒருவர்க்கும் ஞானம் கிடைக்க மாட்டாது' என்றவாறு. "படின்" என்பது, படாமையைக் குறிக்கும் குறிப்பு மொழியாய் நின்றது. உவமைக்கண் "நற்கல்" என்ற அடையினுல், பொருளினும் 'நன்மாணக்கர்" என்பது கொள்ளப்படும். இரண்டிடத்தும் எச்ச உம்மைகள் தொகுத்தலாயின.

இதனுல், 'ஒரோவழி, மாணக்கர் தாமேயாயினும், கல்வியாசிரியர், வேள்வி யாசிரியர் முதலிய பிற ஆசிரியராலாயினும் ஞானத்தை எய்துதல் கூடும்போலும்' என்னும் ஐயம், உவமை முகத்தால் நீக்கப்பட்டது.

(தொடரும்)

பார்வையாளர் குறிப்பு நகல்

தருமபுரம் ஆதீனம்
ஸ்ரீ கம்பகரேசுவரசுவாமி தேவஸ்தானம், திருபுவனம்

இந்த ஆண்டு மாட்டுப் பொங்கல் திருநாளன்று ஸ்ரீலஸ்ரீ தருமைக் குருமணி அவர்களின் தரிசனமும், அருளாசியும் கிடைக்கும் பேறு பெற்றோம். அன்று அவர்களிடம் விடைபெற்றுச் செல்லும்போது அறிவுரை ஒன்று திருவாய் மலர்ந்தருளினார்கள். அதாவது நாங்கள் ஆதீனத்தைச் சேர்ந்த எந்த ஒரு தேவஸ்தானத்திற்கோ, அல்லது நிறுவனத்திற்கோ செல்லும்போது நாம்வேறு நமது ஆதீனத் திருப்பணிகள்வேறு என்ற எண்ணம் கொள்ளாமல் அப்பணிகளையும் நம் பணிகள் என்று ஏற்றுக் கொண்டு நம்மாலான பணி புரியவேண்டும் என்ற அருள் வாக்கே அஃது. அதற்குப்பிறகு குடும்பத்தாருடன் முதன்முதலாக இன்று 21—1—72 ஸ்ரீ தர்மசம்வர்த்தனி சமேத ஸ்ரீ கம்பகரேஸ்வரசுவாமி திருக்கோவிலுக்கு வரக்கூடிய பேறு கிடைத்தது. திருக்கோயிலுக்குள் நுழையும்போதே ஸ்ரீலஸ்ரீ குருமாமணி அவர்களின் அருளாணை நினைவுக்கு வந்தது. அவர்களின் திருவருள் துணை கொண்டு ஆண்டவன் சந்நிதியில் இருக்கும் போது ஆதீன அலுவலர் திரு. ராமலிங்கம் அவர்கள் தேவஸ்தானம் அலுவலாக இங்கு வந்தவர்கள், அன்பர்கள் வந்திருப்பதை அறிந்து முக மலர்ச்சியுடன் வரவேற்று சிரிய முறையில் தரிசனம் செய்வித்து ஆண்டவன் அருளுக்குப் பாத்திரமாக்கினார்கள். எங்களுக் கெல்லாம் ஸ்ரீ சரபேஸ்வரரின் பூரண அருள் உடனே கிடைத்து விட்டது" என நினைக்கக் கூடிய வகையிலே திரு ராமலிங்கம் அவர்கள் எங்களுக்கு வழிபாடு செய்து வைத்தார்கள். இந்த எதிர்பாராத ஒரு நிகழ்ச்சியிலிருந்து ஸ்ரீலஸ்ரீ தருமைக் குருமாமணி அவர்களின் திருவருள் நமக்குப் பூரணமாகக் கிட்டியிருக்கின்றது என்பதை எண்ணும்போது மெய் சிலிர்க்கின்றது. குருவருளின்; திருவருளினல் இறைவன் திருவருள் உடனே கிட்டும் என்பதை மனப்பூர்வமாக உணர்ந்தோம்.

திருக்கோயிலின் வண்ணத்தைச் சொல்லவேண்டும் என்றல் இத்திருக்கோயிலில் திருத்தருமைஆதீன முத்திரை இருக்கின்றது என்று சொல்வதைத் தவிர வேறென்றும் தோன்றவில்லை.

(Sd) R. Krishnaswamy,
Asst. Manager
Ordnance Clothing Factory,
Avadi, Madras-54.
21—1—72.

(Sd.) E. S. Ganapathi,
S/o. Thiru N. Somasundaram Pillai,
Enathimangalam
Mayuram.

தருமையாதீனம்
ஆன்மார்த்தமூர்த்தி ஸ்ரீ சொக்கநாதப்பெருமான் பூசைமடத்தில்

சென்னை, உயர்நீதிமன்ற நீதிபதி
கனம். உயர்திரு, R. சதாசிவம் B. A., M, L., அவர்கட்கு
ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம்
பொன்னாடை போர்த்தி, ஸ்ரீ சொக்கநாதர் பிரசாதம் வழங்குதல்

சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர்
உயர்திரு. நெ. து. சுந்தரவடிவேலு அவர்களுக்கு
தொழிலதிபர் திரு. நா. மகாலிங்கம் அவர்கள் ஏற்பாடுசெய்திருந்த
அறுபதாண்டு விழாவில், (14—1—'72)

தருமையாதீனச்சார்பில்
வித்துவான். ஸ்ரீமத். மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள்
ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் ஆசியுரையைப் படித்தளித்துப்
பொன்னாடை போர்த்துதல்

திருமந்திரம் - மூலமும் உரையும்

திருக்குறள்வேள்,

திரு. ஜி. வரதராஜப் பிள்ளை B, A.,

(மலர் 30. இதழ் 2. பக்கம் 127 இன் தொடர்ச்சி)

234. அந்தண்மை பூண்ட அருமறை அந்தத்துச்
சிந்தைசெய் அந்தணர் சேரும் செழும்புவி
நந்துதல் இல்லை நரபதி நன்றாகும்
அந்தியும் சந்தியும் ஆகுதி பண்ணுமே.

அந்தண்மை பூண்ட - எல்லா உயிர்களிடத்தும் அருள் உள்ளங்கொண்ட. அருமறை அந்தத்துச் சிந்தைசெய் அந்தணர் - அருமையான வேத முடிவாகிய சிவத்தை இடைவிடாது நினைக்கும் அந்தணர். சேரும் செழும் புவி - அடைகின்ற வளமான பூமி. நந்துதல் இல்லை - வளமை குன்றுதல் இல்லை. நரபதி நன்றாகும் - அந்நாட்டு அரசனும் நல்லவனுவான். அந்தியும் சந்தியும் ஆகுதி பண்ணுமே - காலைமாலை ஆகிய இரு வேளைகளிலும் ஆகுதி செய்வார்கள்.

அந்தண்மை - அருளுள்ளம் உடைமை. அருமறை அந்தம் - வேதமுடிவு, சிவம். அந்தி - காலை. சந்தி - மாலை.

அந்தண்மை பூண்டொழுகும் அந்தணர் வாழும் உலகம் மேன்மையுறும் என்பதாம்.

235. வேதாந்த ஞானம் விளங்க விதியிலோர்
நாதாந்த போதம் நணுகிய போக்கது
போதாந்த மாம் பால்புக்க தால்
நாதாந்த முத்தியுஞ் சித்தியும் நண்ணுமே.

வேதாந்த ஞானம் விளங்க விதியிலோர் - ஞானமடைய ஊழின்றி அக்கினிகாரியம் மட்டும் செய்வோர். நாதாந்தபோதம்

நணுகிய போக்கது - நாதாந்த முத்திபதம் மட்டும் எய்துவார். போதாந்தமாம் பரன்பால் புக்கதால் - நாதாந்தம் கடந்து அறிவின் முடிவாம் ஞானம் உண்டாகிப் பரத்தைச் சேர்ந்ததால். நாதாந்த முத்தியுஞ் சித்தியும் நண்ணுமே - நாதாந்த முத்தியோடு இவ்வுலகில் சித்திகளும் பெறுவர்.

நாதாந்தம் - நாதமுடிவு. போதாந்தம் - அறிவின் முடிவு.

பரன்பால் அடையின் முத்தியோடு சித்தியும் கிட்டும் என்பதாம்.

236. ஒன்றும் இரண்டும் ஒருங்கிய காலத்து
நன்றும் இருந்தும் நலம்பல பேசினும்
வென்று விளங்கும் விகிர்தனை நாடுவர்
சென்று வணங்கும் திருவுடை யோரே.

ஒன்றும் இரண்டும் ஒருங்கிய காலத்து - பிராணனும், உச்சுவாச நிச்சுவாசங்களும் அடங்கிய காலத்து. நன்றும் இருந்தும் நலம்பல பேசினும் - மகிழ்ச்சியாக இருந்து நன்மையே பல பேசிக்கொண்டிருந்தாலும். வென்று விளங்கும் விகிர்தனை நாடுவர் - யாவற்றையும் கடந்து விளங்கும் சிவத்தையே சிந்தையில் நாடுவர். சென்று வணங்கும் திருவுடையோரே - ஆதலின், அவரே பதமுத்தியைப் பெறும் செல்வராவர்.

ஒன்று - பிராணன். இரண்டு - உச்சுவாச, நிச்சுவாசம். மூச்சை உள்ளே இழுத்தல், உச்சுவாசம். மூச்சை வெளியே விடுதல், நிச்சுவாசம். மூச்சுக் காற்றுக்களின் இயக்கம் அடங்கும் போதும் சிவசிந்தனையுடையோர் என்க. புறத்தே பல பேசினும், அகத்தே சிவனையே நாடுவர். நாடுதல் - சிவனே பரம்பொருள் எனத் தெளிதல்.

அந்தணரில் திருவுடையோர் பதமுத்தி அடைவர் என்பதாம்.

237. தானே விடும்பற் றிரண்டுந் தரித்திட
நானே விடப்படு மேதொன்றை நாடாது
பூமேவு நான்முகன் புண்ணியப் போகனும்
ஓமேவு ஓரா குதிஅவி உண்ணவே.

தானே விடும் பற்றிரண்டும் தரித்திட-இறைவனை எண்ணிட அகப்பற்று புறப்பற்று ஆகிய இரண்டும் தானே நீங்கும். நானே விடப்படும் - அகங்காரம் அறும். ஏதொன்றை நாடாது-பின்னர் எது ஒன்றையும் தேடாது. பூமேவு நான்முகன் புண்ணியப் போகனும் - பூவிலே பொருந்திய பிரமனைப் போலப் புண்ணியத்தை விரும்புபவனும். ஓம் மேவும் ஓர் ஆகுதிஅவி உண்ணவே - ஆகுதி செய்யப்படும் அவியை உண்ணவே பிரணவம் பொருந்தும்.

யான் என்பது அகப்பற்று. எனது என்பது புறப்பற்று. இவை இரண்டும் இறைச் சார்பு உண்டாயின் நீங்கும். பிரணவம் - பிரணவப் பொருளாகிய சிவம்.

ஆகுதி அவி உண்ணவே பற்றுக்கள் நீங்கும் என்பதாம்.

13. இராசதோடம்

இராச தோடம் - அரசனுக்குரிய குற்றம்.

238 கல்லா அரசனுங் காலனும் நேரொப்பர்
கல்லா அரசனிற் காலன் மிகநல்லன்
கல்லா அரசன் அறம்ஓரான் கொல்லென்பான்
நல்லாரைக் காலன் நணுகநில் லானே.

கல்லா அரசனுங் காலனும் நேரொப்பர் - உண்மை நூல்களைக் கல்லாது அரசனும் காலனும் ஒருங்குவைத்து எண்ணப்படுவர். கல்லா அரசனிற் காலன் மிக நல்லன் - இனி, கல்லாத அரசனைக் காட்டிலும் காலன் மிகவும் நல்லவன். கல்லா அரசன் அறம் ஓரான் கொல் என்பான் - கல்லாத அரசன் அறத்தின் வழி ஆராயாமல் கொல் என்று ஆணையிடுவான். நல்லாரைக் காலன் நணுக நில்லானே - அறத்தின் வழி நிற்கும் நல்லாரைக் காலன் நெருங்கமாட்டான்.

காலன் - காலத்தின் வழி நடப்பவன். ஓர்தல் - ஆராய்தல். நல்லார் - மார்க்கண்டேயரைப் போன்ற நல்லார்.

காலன் அறத்தின் வழி நடப்பான்; கல்லா அரசன் அறத்தையும் பாரான் என்பதாம்.

(தொடரும்)

பாரதியார் பாட்டு நலம்

திரு. மது. ச. விமலானந்தம் எம். ஏ.,

(மலர் 31, இதழ் 2, பக்கம் 131 இன் தொடர்ச்சி)

புதுமை நலம் :

பாரதி புதுமைக் கவிஞன் எனப் போற்றப் பெறுகிருன்; எங்கும் எழிலும் எப்போதும் புதுமையும் காண்பவன்; தமிழ் இலக்கிய வரலாற்றிலேயே பாரதியின் புதுமைப் போக்கு தனித்துவம் வாய்ந்ததாகும்.

சுவை புதிது, பொருள் புதிது
வளம்புதிது, சொற்புதிது, சோதிமிக்க
நவ கவிதை எந்நாளும்
அழியாத மாகவிதை

என்றும், 'புதியன விரும்பு' 'வேதம் புதுமை செய்' எனவும் இயம்புகின்றமை காண்க. பழையனவற்றைக்கூட அவர் பார்க்கும் பார்வையும் பகரும் பாங்கும் புதுமையனவே. பாஞ்சாலி சபதப் படைப்பு சிறந்த காட்டாகும். புதுமை காந்தம்போல் ஈர்த்துக் கவருமன்ருே; இந்நலத்தால் இவர்கவிதை ஏற்றம் பெற்றுளது. புதுமைப் பெட்டகமாக ஞானரதம் பிறங்குகின்றது.

நடை நலம் ;

சொல்லின் இயக்கம் நடையாகும்; நடை, உணர்வை உண்டாக்கும்; உண்மைப்பொருளை ஒளிபெறச்செய்யும். அந்த அந்த பாவத்திற்கேற்ற சந்த நடை வந்தமைகிறது. பாப்பாப்பாட்டில் நடைகொஞ்சி வருகிறது; கண்ணம்மா என் குழந்தையில் உருக்கநடை உருவாகிறது. ஊழிக்கூத்தில் வெறி நடையும்; சுதந்திரப்பள்ளில் கூத்து நடையும்; பகைவனுக்கருள்வாய் பாட்டில் ஆண்மைநடையும், கண்ணன் என் காதலியில் பெண்மை நடையும், என உணர்வுக்கேற்ப ஒவ்வொரு நடையும் ஓடிவந்து ஏவல் புரிகிறது பாரதியிடம். இதனுல் பாரதியின் பாடல்கள் நலம்பல பெறுகின்றன.

உவமை நலம் :

உவமைகள், உரைக்கவந்த கருத்துக்கு ஒளியூட்டும்; தெளிவு கூட்டும். பாரதியின் உவமைகள் நறுக்கென சுருக்கமாகவும், இடத்திற்கேற்ற பொருத்தமுடையதாகவும், ஆற்றல் பெற்றும் அமைவன. உவமை, கவிஞனின் ஒண்மை உணர்த்தும் உரைகல் ஆகும்.

வாயில்காத்து நிற்போன் வீட்டை வைத்திழத்தல் போலும், நாயொன்று தேன் கலசத்தினை எண்ணித் துன்றும் உவகையில் வெற்று நாவினைத் தேய்த்துச் சுவைத்து மகிழ்தல் போல்; வேள்விப் பொருளினையே புலை நாயின் முன் மென்றிட வைப்பவர்போல்' என்பன போன்ற எண்ணரிய உவமைகள் இழையோடி இன்பம் பயக்கின்றன இவர் கவிதையில். இவ்வுவமை நலம் மாந்தி உவகையுறுவோமாக.

உண்மை நலம் :

கவிதை, இன்பம் பயத்தற்கு மட்டுமன்று; வாழ்வுக்கு வழி காட்டும் - ஒளி கூட்டும் பயனும் உடையதாதல் வேண்டும். எனவேதான் கவிஞர் பெருமை அவர் நல்கும் மறக்க முடியாப் பேருண்மைகளைப் பொறுத்துளது என்பர்.* அவ்வகையில் அமரகவி அளவிலா உண்மைநெறிகளை உயர் கருத்துக்களை அள்ளித் தெளித்துள்ளார் தம் அழியாக் கவிதைகளில்!

"ஒன்று பரம்பொருள், நாமதன் மக்கள் உலகின் பக்கேணி; ஒன்றுபட்டால் உண்டுவாழ்வு; ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானம்; எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் ஓர் இனம். எல்லோரும் இந்நாட்டு மன்னர்; பெண்மை வாழ்க - வெல்கென்று கூத்திடுவோமடா; நம்பினர் கெடுவதில்லை, நான்கு மறை தீர்ப்பு; பகைவனுக்கருள்வாய் நன்னெஞ்சே; காதல் பெரிதெனக்குக் காசு பெரிதில்லை; தருமத்தின் வாழ்வதனைச் சூது கவ்வும், தருமம் மறுபடி வெல்லும்; கட்டுண்டோம், பொறுத்திருப்போம், காலம் மாறும்' என்பன போன்றன எண்ணுக.

---

*Memorableness after all is one of the eminent qualities of literature. We judge the greatness of an anthor mostly his minor able passages.

— Roburt Lynd.

இன்னணம் பன்னலமும் பாரதியின் பாட்டில் பார்த்துக் கொண்டே செல்லலாம். பாரதி ஒரு கடல்; அக்கடலில் நலமாம் பல முத்துக்கள் நிறைந்துள. அத்துணை நலமும் கண்டு இன் புறக் காலம் போதா; கண்டதை மீண்டும் மீண்டும் உண்டு உவக்க ஒரு பிறப்பு ஒல்லாது; ஏழ் பிறப்பும் ஏலாது. என்றாலும் ஏதோ கொஞ்சம் தொட்டு மகிழ்ந்தோம். அன்றியும் நலமெலாம் கண்டு மகிழ்வதை விட, உண்டு மகிழ்வதே உயரியது; அறிந்து மகிழ்வதைவிட உணர்ந்து உள்ளுவப்பதே உவப்பிலா இன்பம் பயப்பதாகும்.

'பாவின் நயமெல்லாம் — யானும்
பகர வல்லேனோ ?
ஆவின் பாற்சுவையை — நாழி
அளந்து காட்டிடுமோ ?

என்று கூறி முடிப்பாம்.

EXTRACT FROM THE VISITOR'S BOOK

Dharmapuram Adheenam

Sri Amirthakadeswaraswamy Devasthanam, Tirukkadaiyur

The temple has an inspiring atmosphere and is kept holy and pure, thanks to the efficient administration of Dharmapuram Adheenam.

Justice S. Maharajan,
High Court Judge
19—2—72. Madras

கோயிலின் அமைப்பு முறையும் அதை நிர்வகித்து வருகிற பான்மையும், வழிபாடு நடைபெறுகிற பாங்கும் உள்ளத்தையும், உணர்வையும் தொடுகின்றன. தருமபுர ஆதீனத்தின் ஆட்சித் திறனுக்கு இந்தக் கோயிலில் ஏற்படுகிற அனுபவமே அற்புத மான சான்றாகும். மெய் மறந்து அனுபவித்த அந்த வழிபாட்டு முறையை எப்படித்தான் மொழிகளிலே கூறுவது!

(ஒ-ம்.) மீ. பா. சோமசுந்தரம்,
அகில இந்திய வானொலி
20—2—72. தென் மண்டலத் தலைமை தயாரிப்பாளர்.

" கொழிதமிழ்க் கூடலில் கொன்றை வேணியான் "

வித்துவான். திருமதி. ப. நீலா

(மலர் 31, இதழ் 2, பக்கம் 134 இன் தொடர்ச்சி)

48, நாரைக்கு முத்திகொடுத்தது

பக்திசெய்த பறவைக்கருளிய இறைவன் நாரைக்கு முத்தி தந்த முறைமை மொழிவாம்.

பாண்டி நன்னாட்டிலே மாடமாளிகைகளை உடைய ஒரு நகரத்தில் அழகான தாமரைக் குளமொன்றிருந்தது. அக்குளத்து மீனையுண்டு நந்து முத்தீனும் அதன் கரையில் தங்கி வாழ்ந்துவந்தது நாரை யொன்று. நாள்சில செல்ல அந் நாரையின் இருவினையும் வற்றியதுபோல் அக்குளம் வற்றிக் காய்ந்தது. நுரை செறித்தாற் போன்ற வெண்மையுடன் வலிமையையும் பெற்ற சிறகுகளையுடைய அந்நாரை இனி அத் தடாகத்தில் உணவு கிடைக்காதென்பதறிந்து, வெகு தொலைவு பறந்து முனிவர்கள் தங்கியிருந்த ஒரு பொழிலை யடைந்தது. முனிவர்குழாம் புடைசூழ சத்தியம் என்ற பெயர் கொண்ட உத்தம முனிவரொருவர் அவ்வனத்தில் தங்கியிருந்தார். அங்கே குளிர் தரு நிழலுடன், படித்துறைகளுடன் அழகான குளமும் இருந்தது அதனை 'அச்சோ தீர்த்தம்' என்பர். அதன் கரையில் உணவி லெழுந்த வேட்கையுடன் நாரை வந்து உட்கார்ந்தது.

முனிவர் பெருமான் வந்து தண்கயத்தில் நீராடியபோது பொன்மயமான மீன்கள் அப்புனிதரின் சடையில் பட்டுப் புரண்டு விளையாடின. இதனைப் பார்த்துக்கொண்டிருந்த நாரை "இத் தூயவன் திருமேனி தீண்ட இம்மீன்கள் என்னதவம் செய்திருக்க வேண்டும்" இவைகளை நான் உணவாக்கிக் கொள்ளுதல் பாவம் என்று இரைமேலெழுந்த அவாவை ஒழித்திருந்தது. சத்திய முனிவரைப் பின்பற்றி மற்றைய முனிவர்களும் நீராடி நித்திய கருமங்களைச் செய்தபின் அவர்கள் யாவரும் அக் கரையையொட்டி

யிருந்த மண்டபத்துள் அமர்ந்து கூடல்நாயகனின் திருவிளை யாடல்களைச் சொல்லி மகிழ்ந்தனர். நாரையும் வெகு சிரத்தை யாகக் கூடலின் பெருமையை - பொற்றாமரையின் உயர்வை - சேர்ந்தோரிடம் எளியவனாக வந்து அருள்சுரக்கும் இறைவனின் கருணையை முனிவர் சொல்லக் கேட்டது.

அவ்விளுடியே அறியாமை அகன்றது; சிவபரஞ்சோதியின் பாதத்தில் பற்றிய அன்பு ஈர்க்க நாரை மதுரையை அடைந்தது. திரைமோது மழகுடைய தீர்த்தம்முழுகி வேழந்தாங்கும் விமானத் துள்ளிருக்கும் விமலனை அகங்குளிர தரிசித்துத் தியானம் செய்தது. இம்முறைப்படி பதினைந்துநாள் செல்ல பின்னொரு நாள் பசித்தழல் வயிற்றைச் சுட பொற்றாமரைப் பொய்கையில் துள்ளி விழுகின்ற பொன்னிற மீன்களை உண்ணும் எண்ணத் தோடு அங்குவந்தது.

இறைவன் திருவருள் பாலிக்கவே இச்செயல் தகாதென ஒதுக்கி - அவ்வெண்ணந் தோன்றியவதனால் இப்பிறவி நீங்குவது என்று என வேதனையால்வருந்திச் சுந்தரச்செம்மலின் துணைத்தாளைத் துதித்துநின்றது. கருணைக்கடலான ஐயன் அது நினைத்த வடிவில் வந்தருள, நாரை மெய்யெல்லாம் புள ளிக்கப் பேரானந்தங் கொண்டு 'ஐயனே - அடியேனுடைய இந்த இழிபிறவியைப் போக்கி என்னையும் நின்னுடைய அன்பர்கள் வாழ் சிவலோகத்தில் சேர்த்துக்கொள்ளல் வேண்டும். அதோடு இன்னொரு வரமும் வேண்டுவல், என்மனம் சலனமடைந்தது போல என் மரபினோரும் மனம் மயங்கி இப்புனித தீர்த்தத்தி லுள்ள மீன்களைப் பிடித்துண்ண எண்ணுவர். ஆகையால் இத் தடாகத்தில் மீன்களே இருக்கக்கூடாது' என்று வேண்டிக் கொண்டது.

இப்படி வேண்டிய நாரைக்கு இறைவன் அருள் புரிந்து அக் குளத்தில் மீன்களும் மற்ற நீர்வாழ் உயிர்களும் இல்லாமல் செய் தான். தான் மட்டுமின்றித் தன்கிளையும் உய்ய வழிதேடிய நாரை யின் அன்பையா - அதற்கிரங்கி அருள் செய்த இறைவனின் அருளையா - எதனை வியப்பது! சுகுண பாண்டியனும் பாவமாகிய களைகளைக் களைந்து அறப்பயிர் தழைக்கச் செய்தபிறகு துறக்க வுலகு சென்று இன்புற்றிருந்தான்.

கூடற்காண்டம் முற்றிற்று.

திருவாலவாய்க் காண்டம்

49. திருவாலவாயானது

பாயுடையார் விடுத்தபழி யழல்வழுதி
யுடல்குளிப்பப் பதிகமோதுஞ்
சேயுடையா ரணந்திகளைக்குஞ் செவியுடையா
ரளவிறந்த திசைகளெட்டுந்
தோயுடையார் பொன்னிதழித் தொடையுடையார்
விடவரவஞ் சுற்றுமால
வாயுடையார் புகழ்பாடப் பெறுவேமேல்
வேண்டுவதிம் மனிதயாக்கை.

இம்மனிதயாக்கை வேண்டும். எப்போது? ஆலவாயுடையார் புகழ்பாட முடிந்தால். ஆலவாயானின் பெருமையை அளவிட முடியுமா நம்மால். அவர் ஞானசம்பந்தப்பெருமானருளிய தேவாரம் என்ற தமிழ்வேத மொழிக்கும் செவியுடையார்; திசைகளையே ஆடையாக, பொன்னிறக்கொன்றையை மாலையாக, விடப்பாம்பு சுற்றிய ஆலவாயைப் பதியாக உடையவர். அவரிடம் பக்தி பூண எல்லா உயிர்களாலும் முடியும், ஆனல் அவரைப் பாட மனிதயாக்கைதானே வேண்டும் என்று பரஞ்சோதியார் ஆலவாயானின் புகழ்பாடத் துவங்குகிறுர்.

பிரம்மாமுதல் திருமால் வரையிலுள்ள விண்ணோர், மண்ணோர், விரதயோகர், மாதவர் யாவருங்காண தன் வதனத்தே புன்னகை கொண்டு தன் திருக்கரத்தால் அங்கயற்கண் நாயகியின் எந்தத் திருவடியைப் பிடித்து அம்மியின்மேல் வைத்தாரோ - அந்தத் திருவடிகளே எழுபிறவிக் கடல் நீந்தும் புணையாகுமென்று பற்றிலாதோர் பறைசாற்றுவர்.

வேதனெடு மாலாதி விண்ணுடர் விரதயோகர்
மாதவர்யா வருங்காண மணிமுறுவல் சிறிதரும்பி மாடக்கூடல்
நாதனிரு திருக்கர ந்தொட் டம்மியின்மேல் வைத்தகயனுட்டச்
செல்வி
பாதமலர் எழுபிறவிக் கடனீந்தும் புணையென்பர் பற்றிலாதோர்.

மறைகளோலமிட்டும் காணமுடியாத பரம்பொருள், தன் னுலகத்தை சேலை அவாவி உழந்த நாரைக்கு அருளிய செயலைக் கண்டோம். இனி நிலவாய்மணிநேர் கண்டன் நெடிய நான் மாடக்கூடலை ஆலவாயாகச் செய்த அருள்திறங் கூறுவாம்.

சுகுண பாண்டியனுக்குப் பிறகு சித்திரவிரதன் முதல் அதுல கீர்த்தி முடிய இருபத்திரண்டு அரசர்கள் பாண்டிய சிங்காதனத்தை அலங்கரித்தனர். பழியில்லாப் பாண்டியன் அதுல கீர்த்தியின் வயிற்றில் கீர்த்திபூடணான் பிறந்து பாண்டிநாட்டைக் காத்துவரும் நாளில் கருங்கடலேழும் கரைகடந்தார்த்துப் பொங்கி ஒருங்கெழுந் துறுத்திச் சீறிவந்தது. திசையானைகள் எட்டு - பொன்னெடுங்கிரி - சக்ரவாளமலை என்னும் இவைகளை அழித்தெழுந்ததுடன் மேல் கீழ் என்ற உலகங்களையும் அழித்துப் பிரளயமாக ஆயிற்று. இந்தப் பிரளயத்துள் ஏழுதீவுகளும் அவற்றுளடங்கிய அசையும் அசையாப்பொருள்களும் அழிந்தன.

இறைவனின் கருணையினால் சேல்நெடுங்கண்ணி கோயிலும்' விண்ணிழி விமானமும், பொற்றாமரைத் தீர்த்தமும், இடபமலை யானைமலை, பசுமலை, பன்றிமலை என்ற இடங்களும் அழியாது நின்றன. வெள்ள நீர் வறக்கவே ஆதிவேதியன் முன்பிருந்த உலகை மீண்டும் படைத்தான். தேவர்களை, மனிதர்களை, விலங்குகளை, ஒளியுடம்பு கொண்ட சோம சூரிய அக்னி யென்ற கதிர்களை தள்ளரும் மரபில் வந்த தமிழ் வேந்தர்களைப் படைத்தான்.

சந்திர குலத்தில் வங்கிய சேகரனென்னும் மன்னன் வந்து தோன்றினன். கழலணிந்த அம் மன்னவன் தன்குல நாயகனை சோமசுந்தரப் பெருமானின் திருக்கோயிலைச் சூழ நகரமொன்று அமைத்து அரசாளத் துவங்கினன்.

மனுவழிச் செங்கோல் செலுத்தும் அவனாட்சியில் பசியும் வறுமையும் இல்லாமல் போகவே பல் வளனுடன் மக்களும் பல்கினர். பெருகிய மக்கட்பரப்புத் தங்க இடங் குறைவாக இருக்கவே இறைவனின் திருக்கோயிலை யடைந்து கறையணி கண்டனைத் தாழ்ந்து ஐயனே நின்னருளால் நிலந்தாங்குமெனக்கு இப்போது குறையொன்று வந்தது. இத்தனைமக்களும் இருக்கத் தக்கதாக இந்நகரை விரிவாக்க எண்ணுகின்றேன். ஆனால் இந்நகர் எல்லை எனக்குத் தெரியவில்லை நீதான் எனக்கு அருள் செய்ய வேண்டும் என்று கைதொழுதான்.

விண்ணிழி விமானத்திலிருந்து எழுந்த பிரான் மீனவனின் திண்ணிய அன்பினுக்கு எளியராகிச் சித்தராய் வந்தார். பாம்பையே மேனி முழுதும் ஆடையாக, ஆபரணமாகப் பூண்ட அவர் தன் கையிலிருந்த ஆலவாயென்ற பாம்பை நோக்கி' நீ இம் மன்னன் மயக்கங்கெட இந்நகரெல்லை காட்டு' எனச் சொன்னார். தன் பெயரால் இந்நகர் என்றும் அழைக்கப்பட

வேண்டும் என்ற அரவின் ஆசையை ஏற்று அருள் புரிந்தார் சித்தர். கீழ்த்திசைச்சென்று தன் கேழ்கிளர் வாலை நீட்டி மா நகரை வலம்வந்து பின்னும் வாலைத் தன் வாயில் வைத்து அந் நகரெல்லையை அழகுறக் காட்டிய அரவம் மீண்டும் அவர்கையி லேயே கங்கணமாக ஆயிற்று. சித்தர் தம் கோயிலடைந்தார். வேந்தன் இறையருளை வியந்து வாழ்த்தி ஆலவாய் காட்டிய படியே சுவரெடுத்து நகரமைத்தான்.

தெற்கில் திருப்பரங்குன்றமும், வடக்கில் இடபமலையும், மேற்கில் திருவேடகமும், கிழக்கில் பொன்பொழிற் பூவண நகரும் என நாற்பெரும் எல்லை வகுத்தான். கொடிகளசையும் மதில்கள் மண்டபங்கள், கோபுரம், வீதிகள் எல்லாம் பண்டு போல் (பிரளயத்திற்கு முன்பு இருந்ததுபோல்) கண்டு இறைவ னுக்குப் பல திருவாபரணங்களையும் செய்தளித்தான். பல்வகைக் குடிகளும் குறைவின்றி வாழ இந்திர னுலகினுஞ் சிறந்து இவன் நகரம் விளங்கியது. பண்டையநாள் மதுரை நகரைக் கண்ட குலசேகரன்போல் கீர்த்தியுடனும் செழிப்புடனும் வங்கியசேகரன் ஆண்டான்.

(வளரும்)

குமரகுருபரன்

தருமையாதீனத்து முனிபுங்கவரும். ஸ்ரீ காசிமடத்து முதல்வருமான ஸ்ரீலஸ்ரீ குமரகுருபர சுவாமிகளினுடைய திருப்பெயர் பூண்டு, சமயம், இலக்கியம், அறம் முதலிய வற்றை எளிய நடையில் தெளியச் செய்யும் ஆராய்ச்சிவிளக் கத்துடன் திருப்பனந்தாள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களது ஆணையின் வண்ணம் உயரிய இவ்விதழ் வெளிவருகிறது.

ஆண்டுச் சந்தா :- ரூ 3—00

விலாசம் :— நிர்வாக ஆசிரியர்,

உயர்திருவாளர், T. M. குமரகுருபரன் பிள்ளை

B. A., B. L., அவர்கள்

குமரகுருபரன் ஆபீஸ், ஸ்ரீவைகுண்டம்.

ஆரூர் அரநெறி

புலவர்மணி, வித்துவான்,

திரு. மு. இரத்தின தேசிகர்

ஆரூர், பிறக்க முத்திதரும் தலம். இதனாலன்றோ ஆரூர்ப் பிறந்து வாழ்வாரெல்லாம் நமிநந்தியடிகள் நாயனாருக்குச் சிவ கணங்களாகக் காட்சியளித்தனர். நம் சுந்தரமூர்த்தி சுவாமிகளும் "திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்" என்று பாடியருளினார்கள். இவ்வாரூர், பழம் பெருமைகளுக்கு உறைவிடமாயது. பராசக்தி உயிர்களின் நலங்கருதி இத் தலத்தே தவம்புரிவதால் இத்தலம் சத்திபுரம் எனவும் வழங்கப் பெறுகின்றது. அப்பமூர்த்திகள் இத்தலத்தின் பழமையை அறுதியிட்டுக்கூற இயலாது, திருத்தாண்டகத்து ஒருபதிகமே பாடியிருக்கிறார்கள். இவ்வாரூரில் இன்றும் எளிமையில் உண்மை நிலை அறியவொண்ணா இடங்களும் செயல்களும் உள்ளன. அவற்றுள் ஒன்று அரநெறி.

அரநெறி :

திருவாரூர்ப் பூங்கோயில் என்பது, கோயிலின் நடுநாயக மாய்ப் புற்றிடங்கொண்ட புராதனன் உறைவிடமாய் உள்ளது. இப்பூங்கோயிலுக்குத் தென்கிழக்கே, அரநெறியும்; (அசலேச்சுர மும்,) தென்மேற்கே, ஆடகேசச்சுரமும், வடமேற்கே, ஆனந்தீச் சுரமும், வடகிழக்கே சித்தீச்சுரமும் உள்ளன. அசலேச்சுரம் என்ற பெயர், இக்கோயிலில் இலிங்கவடிவாய் உறையும் சிவ பெருமான் எங்கும் இடம் பெயர்ந்து செல்லாது நிலைத்து இருப் பதால் அமைந்தது என்ற செய்தி, இத்தலத்திற்கு வடமொழி நாகரகாண்டத்தின் மொழி பெயர்ப்பாகச் சம்பந்த முனிவர் எழுதியுள்ள தலபுராணத்தால் அறியப்படுகின்றது. வேறு எந்தத் தலத்திற்கும் இல்லாத பெருமையாக அப்பர் சுவாமிகள் ஆரூருக்கென இருபத்துமூன்று திருப்பதிகங்களைத் திருவாய் மலர்ந்துள்ளார்கள். இவ்விருபத்துமூன்று பதிகங்களில் இரண்டு பதிகங்கள் அசலேச்சுரத்திற்கு அமைந்துள்ளன. அப்பர்

சுவாமிகள் தாம் பாடியுள்ள இவ்விரு பதிகங்களிலும் இக் கோயிலை அசலேச்சுரம் என்று குறிக்காது, அரநெறி என்ற புதுப்படைப்பு ஒன்றை நல்கியிருக்கிறார்கள். அறம்+நெறி என்ற தொடர்தான் பிற்காலத்தே மாறி அரநெறி என்றாயிற்றோ என்று சிலர் ஐயம் கொள்ளலாம். அரன்—நெறி என்று பிரித்துப் புணர்த்துவதற்கும் வருமொழி நகரம் திரியாமையால் பொருந்துவதாக இல்லை. எனவே "அரநெறி" என்ற தொடரின் உண்மைப் பொருளை அறிவது அரிதாயுள்ளது.

'தமிழாளியார்' என்று சேக்கிழார் சுவாமிகளால் குறிக்கப்பெறும் நம் அப்பமூர்த்திகள் நம் தமிழ் மொழிக்குத் தாம் பாடியுள்ள தேவாரத்தின் வாயிலாக எண்ணற்ற பெருமைகளைத் தந்துள்ளார்கள். அவற்றில் ஒன்று இவ்வரிய படைப்பு. பன்னெடுங்காலமாக இணைந்து நடக்கும் வடமொழி, தென்மொழியாகிய இவ்விருமொழிகளும் எண்ணற்ற சொற்களைத் தம்முள் பரிமாறிக்கொண்டுள்ளன. இவ்விரு மொழிச்சொற்களும் இணைந்து ஒரு புதுத்தொடரைத் தோற்றுவித்தும் உள்ளன. அவற்றுள் ஒன்று "மீனாட்சி" என்பது; மீன் என்ற தமிழ்ச்சொல், மீன் என்ற வேரினின்றும் பிறந்தது. அட்சி என்ற வடசொல், அட்சம் என்ற வடசொல்லால் தோன்றியது. இத்தமிழ்ச்சொல்லும் வடசொல்லும் இணைந்து "மீனாட்சி" என்றாயது போன்று "அரநெறி" என்ற தொடரும் அப்பர் சுவாமிகளால் ஆக்கப் பெற்றுள்ளது. ஹர என்ற வடசொல் ஹ்ரு என்ற மூலத்தினின்றும் பிறந்தது. இதன் பொருள் போக்கிவிடுதல் (To take away) என்பதாகும். ஹர என்ற வடசொல் தமிழாக்கம் பெறும் போது அர என்றாகின்றது. இதனுடன் நெறி என்ற சொல் இணைந்து வழி என்று பொருள் தந்து; இரண்டுமாக இணைந்த காலையில் போக்கிவிடுதலாகிய வழி என்று பொருள்படுகின்றன. எதைப் போக்கிவிடுவது? அந்த நெறி என்பதுதான் நம் சிந்தனைக்கு உரியதாக இருக்கின்றது. ஒவ்வொரு மாதமும் தேய்பிறையில் வரும் சதுர்த்தி, சங்கடஹர சதுர்த்தி என்று கொண்டாடப் படுகின்றது. இந்நாளில் விநாயகரை வழிபடின் சங்கடம் (துன்பம்) நீக்கப்படும் என்பது பொருளாகும். இதே போன்று ஆரூர் அரநெறி, தன்னை அடைந்தாரது வினைத் துன்பத்தைப் போக்கும் என்ற பேருண்மையினை நாவுக்கரசு சுவாமிகள் நமக்கு உணர்த்துகின்றார்கள். தாம் நுகர்ந்த இந்த உண்மையினை இத்தலத்திற்குத் தாம் பாடிய திருத்தாண்டகப் பாடல் ஒவ்வொன்றின் ஈற்றடியிலும் தெள்ளத் தெளிய எடுத்தியம்புகின்றார்கள். "அரநெறியில் அப்பன் தன்னை — அடைந்தடியேன் அருவினை நோய் அறுத்தவாறே" என்பது அத்தொடர்.

இன்னும் இத்தலத்திற்குத் தாம் பாடியுள்ள திருக்குறுந் தொகையுள்

" எத்தீ புகினும் எமக்கொருகேடில்லை
... ...எம்முன் உழிதர்வர்
... ...
அத்தீ நிறத்தார் அரநெறி யாரே "

என்றும்

" ஏத்தினர் பாவம் கழித்தனர்
... ... ஆரூர் அரநெறியாரே "

என்றும்

" ... ...தம்வினை ஆனவெல் லாம்அற
அற்றவர் ஆரூர் அரநெறி கைதொழ
உற்றவர் தாமொளி பெற்றனர் தாமே "

என்றும்,

ஆரூர் அரநெறி, தன்னை அடைந்தவரது வினைத் துன்பத்தினைப் போக்க வல்லது என்பதற்குப் பல அகச்சான்றுகள் தந்துள்ளார் கள்.

சிவபெருமானுக்கு உரிய திருநாமங்கள் பல. ஒவ்வொன்றும் ஒவ்வொரு உண்மையினை உணர்த்தும். " சங்கரன் " என்ற திருப்பெயர் " தன்னடைந்தார்க்கு இன்பங்கள் தருவானை " என்ற தமிழ்மறைத் தொடரை நினைப்பூட்டுகின்றது. உயிர் களுக்கு இன்பத்தை — பேரின்பத்தை — அழியாவீட்டின்பத்தைச் செய்பவன் சிவன் என்பதைத்தான் (சங் - கரோதீதி - சங்கர) " சங்கரன் " என்ற திருப்பெயர் உணர்த்துகின்றது. இன்பப் பேற்றிற்குமுன் வேண்டப்படுவது வினை நீக்கமன்றோ? அவ்வினை நீக்கம்பெற விழைவோர் ஆரூரை அடைந்து " அரநெறி அப் பனைத் தொழவேண்டும் என்று நாவுக்கரசு சுவாமிகள் நமக்கு ஆணையிடுகின்றார்கள்.

அசலேச்சுரம் :

அப்பர் சுவாமிகள் ' அரநெறி, என்றழைத்த இத்தலம் தல புராணத்தே ' அசலேச்சுரம், என்று அழைக்கப்பெறுகின்றது. முன்னொரு காலத்தில் அருத்த தேசத்தைச் சமற்காரன் என்ற அரசன் ஆண்டு வந்தான். அறத்தின் வழுவாது செங்கோ லோச்சிய அவன் ஒருநாள் வேட்டைமேற் சென்றான். பல விலங்குகளைக் கொன்றான், அப்பொழுது, தன் சிறுகன்றிற்குப்

யால் ஊட்டிய ஒரு மான்மீது அவன் அம்பு பாய்ந்தது; அம் மான் இறக்கும்பொழுது அரசே! நான் இறப்பதற்கு வருந்த வில்லை; என் பாலைக்குடித்து வாழும் இக்கன்று பாலின்றிப் பசியால் இறக்குமே என்று தான் வருந்துகின்றேன். இப் பாவத்தைப் புரிந்த உன்னை வெண்குட்டநோய் பற்றும், என்றது. அரசன் மானை நோக்கி "வேட்டையாடுவது வேந்தரது அறச்செயலே" என்ருன். மான் அரசனை நோக்கி,

என்றவன் இசைப்பரி வேட்டை இழைத்திடல்
அறனே வேந்தர்க்கு
ஒன்றிய புணர்ச்சி தெண்ணீர் உண்டிடல்
ஒண் பாலூட்டல்
நன்றினி துறங்கல் செய்யும் விலங்கைநோய்
நனிகொள் சூலான்
மன்றவே வருந்து மாவை வதைப்பது
தரும மன்ருல்.

என்று கூறி இறந்தது. வெண்குட்ட நோய் அரசன் உடலெங் கும் பரவியது. சமற்காரன் மிகவும் வருந்தித் தன் அமைச்சர் களிடம் தன் மகனுக்கு முடிசூட்டுமாறு கூறித் தவக்கோலம் பூண்டான். புண்ணிய நீர் ஆடிப் பலதலங்களை வழிபட்டான். நோய் தீர்ந்திலது. கடைசியாகத் திருமறைக்காட்டை அடைந்து ஆண்டுள்ள கௌசிக முனிவரது ஆசிரமத்தை அடைந்தான். அங்கே வாழ்ந்த முனிபுங்கவர்களை வணங்கித் தன்குறை முடிக்க வேண்டினன்.

முனிவர்கள் 'அரசே இப்பாவம் நீங்கவேண்டின் நீ திரு வாரூரை அடைந்து வன்மீகநாதனை வழிபட்டுச் சங்க தீர்த்தத் தில் முழுகவேண்டும் என்றனர். அரசனும் அதற்கு இசைந்து அம்முனிவரில் சிலரைத் தனக்குத் துணையாக அழைத்துக் கொண்டு ஆரூரை அடைந்தான். சங்க தீர்த்தத்தில் முழுகிப் புற்றிடங்கொண்ட புண்ணியனை வழிபட்டு நோய்நீங்கினன். அம்முனிவர்கள் வாழ்வதற்கு ஆரூரில் பலஇல்லங்கள் அமைத்துத் தந்து தானும் அங்கேயே தவநெறி மேற்கொண்டு வாழ்ந்து வந்தான்.

ஆரூரில் வாழ்ந்த சமற்காரன் வன்மீக நாதரைக்குறித்துக் கடுந்தவம் புரிந்தான். வன்மீகநாதர் அரசன் முன் தோன்றி வேண்டும் வரம் யாதென வினவினர். வேந்தன் "இறைவா நான் இக்கோயிலின் உள் தனி ஒரு இலிங்கத்தைத் தாபித்து வழிபட விரும்புகின்றேன். தாங்கள் அதில் என்றும்

அகலாது தங்கி வழிபடுவோருக்கு வேண்டும் வரங்களைத் தரவேண்டும்'' என வேண்டினன். வன்மீகநாதரும் ஒருப் பட்டு மறைந்தார். மன்னனும் தன் விருப்பின்படி- வன்மீகநாத ருக்குத் தென்கீழ் மூலையில் இலிங்கத்தைத் தாபித்து வழிபட் டான். இலிங்கத்தில் நின்ற இறைவன் என்றும் அகலாது இருப்பதால் அவ்விலிங்கம் அசலேச்சுரம் ஆயிற்று. இது மேற்கு நோக்கிய வாயிலை உடையது.

இவ்விலிங்கத்தின் நிழல் கிழக்குத் திசையிலன்றி மற்றத் திசைகளில் விழாது. ஆறு மாதங்களுக்குள் இறப்பவர்களுக்கு இந்நிழல் புலப்படாது. மாசி மாதச் சிவராத்திரியில் 'கிருத கம்பளத்தைச் சாத்தி வழிபட்டோர் (நெய் தோய்ந்த கம்பளம்) பெருஞ்செல்வராய் வாழ்ந்து சிவபதமடைவர். சங்க தீர்த்தத்தில் மூழ்கி அசல நாயகனை வழிபடின், மந்திரம், மணி, மருந்தால் நீங்காத நோய்கள் நீங்கும்.

'' அகிலம் ஏத்தியே வணங்கிடும் அசலநாயகற்குத்
துகில்நறும்புகை தீபம்ஒண் சந்தனம் தொடலை
மகிழ்வின் ஈந்தவர் மாநிலத் தரசராய் மன்னிப்
புகழ்செய் இந்திர ராகிவின் னுடெலாம் புரப்பார்,''

என்ற தலபுராணப் பாடலில் தூபதீபம் இடுவதால் வரும் பயன் கூறப்பட்டிருப்பது சிந்தனைக்கும் உரியதாகும். இதனு லன்றோ நமிநந்தியடிகளும் இத்தலத்தே விளக்கிட ஆர்வம் கொண்டு நீள் நாடறிய நீரால் விளக்கெரித்தார்.

'' இந்த மூர்த்தியைக் காணினும் எண்ணினும் அயுதம்
ஐந்துபாதகம் அக்கணத்து அழிந்திடும் அம்மா ''

'' அசல நாயகன் என்றொரு காலினி தறையில்
வசையில் மாதவிர் அயுதமாம் பிறப்பினில் வந்தாங்கு
இசையும் மாபெரும் பாதகத் தொகுதிகள் யாவும்
விசய வான்கதிர் கண்டகூர் இருளென விளியும் ''

'' ....அசலே சனுந் திருப்பேர்
மூர்த்தி சேவடி பூசனை ஆற்றியே முன்னர்ப்
போர்த்த தீவினை வெஞ்சிறை முழுவதூஉம் போக்கி
ஆர்த்த பாசமற்று அழிவில் விடெய்தினர் அனேகர் ''

என்ற தலபுராண அடிகள் நாம் முன்னர்க்கண்ட அப்ப மூர்த்திகளின் திருவாக்கிற்கும் ஒத்திருத்தல் காண்க. எனவே

அசலேச்சுரம் – அரநெறி என்று அழைக்கப்படும் பேருண்மையினைத் தல புராணத்தாலும், அப்பமூர்த்திகளின் திருவாக்காலும் நாம் அறிகின்றோம்.

நமிநந்தியடிகள் :

ஆரூர், பல நாயன்மார்களது அருஞ்செயல்களுக்கு நிலைக்களமாயது. அவருள் ஒருவர் நமிநந்தி அடிகள் ஆவார். இவரைச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருத்தொண்டத்தொகையுள் "அருநம்பி நமிநந்தி அடியார்க்கு மடியேன்" என்று பாடியுள்ளார்கள். திருநாவுக்கரசு சுவாமிகள்,

"நந்திபணி கொண்டருளும் நம்பன் தன்னை"

என்றும்,

"ஏத்தினர் பாவம் கழித்தனர்
... ...ஆரூர் அரநெறி யாரே"

என்றும்,

'நம்பிநந்திநீரால் திருவிளக்கிட்டமை நீள்நாடு அறியுமன்றே' என்றும் சிறப்பித்துப் பாடியுள்ளார்கள். நந்தி என்ற திருப்பெயர், சிவபெருமானுக்கு உரியது.

"நந்தி நாமம் நமச்சி வாயவே"

என்பது திருஞானசம்பந்த சுவாமிகள் திருவாக்கு.

"நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை"

என்பது திருமூலர் திருவாக்கு. அகச்சந்தானகுரவருள் முதல்வர் நந்தி என்ற நாமத்தைப் பெற்றுள்ளார்.

புறச்சந்தானகுரவருள் இரண்டாமவராய்த்திகழும் "அருள் நந்தி சிவாச்சாரிய சுவாமிகளின் திருப்பெயரை நோக்கும்பொழுது நந்தி என்ற திருப்பெயர் சிவநெறி நிற்பாருக்கு வழங்கப்பெற்றிருத்தல் அறியப்படுகிறது. இன்றும் காசிமடத்து அதிபராய் உள்ள சுவாமிகளின் திருப்பெயரும் "தவத்திரு அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள்" என்று வழங்கப்பெறுதல் காண்க. எனவே நமிநந்தி அடிகளும் இம்மரபுபற்றி நந்தி என்ற திருப்பெயரால் அழைக்கப்பெற்றிருத்தல் வேண்டும்.

நம்பி என்பது ஆடவருள் சிறந்தானைக் குறிக்கும் மரபுப் பெயர் ஆகும். "நம்பி ஆரூரர்", "பூந்துருத்தி நம்பி காட நம்பி", "புருடோத்தம நம்பி" என்ற வழக்காறுகள் சிந்தனைக்கு உரியன. எனவே இவ்வடியார் பெயர் "நம்பிநந்தி அடிகள்" என்று முதற்கண் வழங்கப்பெற்றுப் பின் "நமிநந்தி அடிகள்" என்று மருவியிருத்தல் வேண்டும்.

சோழநாட்டு ஏமப்பேறூரில் அந்தணர் குலத்தில் நமிநந்தி அடிகள் தோன்றினர். வேதம் ஓதித் திருநீற்றை மெய்ப்பொருள் எனப் போற்றிச் சிவபெருமான் திருவடிகளை வழிபட்டுவந்தார். திருவாரூர்ப் புற்றிடங்கொண்டபுராதனனை ஒருநாள் மாலை வழிபட்டு வெளியே வந்தவர், அரநெறி அப்பனையும் வழிபட்டார். அங்கே தீபம் இட விழைந்தார். மாலை நேரமாக இருந்ததால், தன் ஊர்சென்று திரும்ப இயலாததாயிற்று.

பக்கத்துள்ள ஒரு சமணர் வீட்டை அடைந்து, விளக்கிட நெய்வேண்டினர். அவ்வீட்டார் "கையில் நெருப்பேந்திய உமது இறைவனுக்கு விளக்கேற்றுதல் மிகையாகும். வேண்டுமாயின் நீரை ஊற்றி எரியும்" என்று இழித்துக்கூறினர். அடிகள் கோயிலின்முன் எய்தி வணங்கி விழுந்தார். அப்போது "நீர் கவலையை விடுத்துப் பக்கத்துள்ள குளத்து நீரை முகந்துவந்து மாருவிளக்கு இடும்பணியைச் செய்வீர்" என்ற அசரீரி வாக்கு எழுந்தது. அவ்வாறே அடிகளார் அரநெறி முழுவதும் நாடறிய நீரால் விளக்கேற்றினர்.

இவ்வாறே பலநாளும் நீரால் விளக்கேற்றும் பணியைச் செய்துவந்தார். அப்பொழுது தண்டியடிகளால் சமணர்கள் ஆரூரைவிட்டு அகன்றனர். சோழவேந்தன் நமிநந்தியடிகளின் தொண்டு சிறக்க நிபந்தம் பல செய்தான். வீதிவிடங்கப்பெருமான் திருவிளையாட்டால், அடிகள் பங்குனி உத்திரப் பெருவிழாவினைச் சிறப்புறச் செய்தார். ஆரூர் இறைவன் ஒருநாள் மணலிக்கு எழுந்தருளினர். அடிகளார் இறைவனை வணங்கித் தம்வீடடைந்து வெளியிலிருந்தபடியே தம் மனைவியாரிடம் "விழாவிற் கலந்துகொண்டு வந்ததால் தீட்டு ஏற்பட்டது; குளித்து விட்டுள்வந்து சிவபூசை செய்வதற்கு வேண்டுவன செய்க" என்று கூறினர். சிறிதுபொழுது அயர்வால் உறங்க இறைவன் கனவில் தோன்றி, "ஆரூரில் பிறந்தார் எல்லாம் நம் கணங்கள்" என்று கூறி மறைந்தனர். அடிகளார் விழித்தெழுந்து ஆரூரை அடைந்து அங்குப் பிறந்து வாழ்வார்

அனைவரும் கண்டங்கறுத்த இறைவனது வடிவுடன் இருப்பக் கண்டு வணங்கினர். மீண்டும் அனைவரும் தம் பழைய வடிவம் பெற்றதையும் கண்டார். அன்று முதல் ஆரூரில் குடிபுகுந்து வாழ்ந்து, அடியார்க்கு வேண்டுவன செய்துவந்தார். "புற்றிடங் கொண்ட இறைவனது தொண்டர்க்கு ஆணி" என்று திருநாவுக்கரசு சுவாமிகள் புகழும் பேறுபெற்றார். முடிவில் ஆரூர் இறைவனது திருவடி நீழலில் பொருந்திய சோதியில் ஒரு வைகாசிப் பூசநாளில் கலந்தார்.

வரும் பரிதாபி ஆண்டு வைகாசித்திங்கள் பூசநாளில் ஆரூர் அரநெறியில் நமிநந்தியடிகள் நீரால் விளக்கிட்ட விழா இனிதின் நடக்கவிருக்கிறது. சைவ நன்மக்கள் விழாவிற் பங்கு கொண்டு பெரும் பயன் அடைக.

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Amirthakadeswaraswami Devasthanam, Tirukkadaiyur

I visited the most important ancient temple of South India and performed ஆயுஷ்யஹோமம் & Rudhra Abishegam and I am really impressed with the way which this temple is maintained. As other temples under Dharmapuram Adhinam this temple is also kept neat and tidy. The Pooja and other rites were performed very well and I was very much impressed with everything.

(Sd.) V. Ramaswamy,

5—3—72

Cheyar,
(Via.) Madurandakam,
Chinglepet Dist.

கடவுள் உண்டா?

தமிழ்நாடு ஆளுநர்-மேதகு. கே. கே. ஷா அவர்களின்

விஞ்ஞான ரீதியான ருசுக்கள்

கடவுள் இருக்கிறாரா? இருக்கிறார் என்பதற்கு நம்பகமான ருசு உள்ளது என்கிறார் கவர்னர் கே. கே. ஷா.

கடவுள் இருக்கிறார் என்பதற்கு விஞ்ஞான ரீதியான ருசு வேண்டுமென்பவர்களுக்குச் சில கேள்விகள் போட்டால்போதும் என்கிறார்கள் அமெரிக்க விஞ்ஞானிகள்.

சூரியனுக்கும், பூமிக்கும் உள்ள தூரம் 6 அல்லது 8 மைல் குறைந்தால் உலகம் என்னவாகும்? பூமியின் சுழற்சிக் கோணத்தில் ஒரு டிகிரியில் 10-ல் ஒரு பங்கு மாறினால் என்னவாகும்?

இந்த மாதிரி இன்னும் பல கேள்விகள் இருக்கின்றன. கடைசிக் கேள்வி; உலகம் சம நிலை தவறாமல் சீராக இயங்கி வரச்செய்வது யார்? உலகில் உள்ள எத்தனையோ கோளங்கள் ஒன்றோடொன்று மோதாமல் சமநிலை தத்துவத்தில் இயங்குகின்றன. ஒன்றின் கதி சிறிது பிசகினாலும், உலகம் தகர்ந்துவிடுமல்லவா?

உலகின் இயக்கத்தில் ஒரு ஒழுங்கு நியதி இருக்கிறதென்று ஒப்புக்கொண்டால், அந்த ஒழுங்கு நியதி தானாக உண்டாகிறதா அல்லது சம நிலையின்மைகளை யாராவது சரி செய்து ஒழுங்குபடுத்துகிறார்களா? என்பதைத் தீர்மானிக்கவேண்டும்.

ஒழுங்கு நியதி இருக்கிறதென்பதை ஒப்புக்கொண்டால் அதற்குள்ளேயே சமநிலையின்மைகளும் அடங்கியுள்ளன என்பதையும், அதை ஒரு மகாசக்தியால்தான் சரிப்படுத்த முடியும் என்பதையும் ஒப்புக்கொள்ளவேண்டும். அதைப் பரமாத்மா என்றோ அல்லது மேதா சக்தி என்றோ அழைக்கலாம்.

இப்படி ஆராய்ச்சிசெய்து பார்த்தால், இறுதியில் ஏதோ ஒரு மகாசக்தி இருக்கிறதென்பதில் சந்தேகம்இராது. அதைக் கடவுள் என்று சொன்னாலும் சரி. பரமாத்மா என்று சொன்னாலும் சரி.

சர்வகலாசாலை மான்யக் கமிஷன் ஒத்துழைப்புடன் சென்னை சர்வகலாசாலைத் தத்துவ கழகத்தின் ஆதரவில் "கடவுள் தத்துவம்" பற்றிய அகில இந்திய கருத்தரங்கைத் துவக்கி வைத்து கவர்னர் பேசினார்.

—தினமணி 3—3—72.

வாழ்த்தும் அஞ்சலியும்

சாந்தலிங்க இராமசாமியடிகள், பேரூர் (அஞ்சல்)
கோயமுத்தூர்-10.

அன்பு அஞ்சலி

(1) அருளோங்கு கைலாய பரம்பரையில்
மெய்கண்டார் அருளும் நூலின்
பொருளோங்கு மெய்ந்நெறியை உணர்த்துசிவ
ஞானியராய்ப் பொலிந்து தீய
மருளோட்டி உயிர்செழிக்கும் வழிகாட்டி
வளர்பீட மரபில் வந்து
தெருளோங்க அருள்தருமை யாதீனக்
குருமுனிவர் சிவமே யானார்.

(2) திருமடங்க ளிணைந்திடவும் ஆதீனத் தலைமையினர்
சேர்ந்து பேசி
பெரும்பணிகள் புரிந்திடவும் தெய்வீகப் பேரவையின்
பெருமை காத்து
ஒருமைபெறும் வாழ்வுக்காம் நல்லுரைகள் பரிவுடனே
ஓதும் நாவர்
அருமைமிகு பணி இருபத் தாறுண்டு குருபீடத்
தருளால் ஆற்றி

(3) எம்போன்ற பலர்மகிழ நல்லுரைகள் பரிவினுடன்
இனிதே கூறி
நம்சமய நெறிவளரத் தமிழ்வளரத் திருப்பணிகள்
நாளும் செய்து
இம்மணிடை உயர்காசித் திருநகரில் இறைவனடி
இனிது போற்றி
அம்மையப்ப னிணையடியில் கலந்திட்டார் ஞாலமுய்ய
அருள்க நன்றே.

நல்வாழ்த்து

தருமை பீடத் திருபதின்மேல் சாற்றும்
ஆறும் பட்டத்தில்
குருவாய்த் திகழும் அருளாளர் குலவும்
புலமை முதற்பலவும்

மருவும் உளத்தார் சண்முகப்பேர் வாய்த்த
செஞ்சொற் றேசிகரன்
புருவாய் அருளை வளர்த்திடவே உள்ளத்
திறைதாள் போற்றுதுமே.

கனம். பி. எஸ். கைலாசம், உயர்நீதி மன்ற நடுவர், சென்னை.

கயிலைக் குருமணி அவர்களின் பிரிவு, பக்தர் உலகைக் கண்ணீர்க் காடாக்கி விட்ட நிலையில், படகு கவிழ்ந்ததால் பரிதவித்த நெஞ்சத்திற்குக் கிடைத்த கட்டு மரம் போலக் கனிவு ததும்பும் முகத்தோடு காட்சி தருகிறார்கள் புதிதாகத் தருமை யாதீன ஆட்சிப் பொறுப்பேற்றுள்ள ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள். அவர்கள் 26-ஆவது குருமகா சந்நிதானமாக விளங்குகிறார்கள். குருமணி அவர்களின் ஆட்சியைப் போலவே இவர்களின் ஆட்சியும் குறைவற்று விளங்கும் என்பதிலே எனக்கு மிகுந்த நம்பிக்கை. அந்த நம்பிக்கையை நிறைவேற்றிவைக்க, செந்தமிழ்ச் சொக்கர் பேரருள் புரிவாராக!

நீதிபதி
கனம். பு. ரா. கோகுலகிருஷ்ணன் சென்னை - 2
நவம்பர் 17, 1971

ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் 25-வது மகாசந்நிதானம் மறைவு இவ்வளவு விரைவில் வருமென யாரும் எதிர்பார்க்கவில்லை. தமிழகத்தினின்று பல மைல் தொலைவில் திடீர் மரணமுற்ற செய்தி எங்கள் அனைவரையும் திகைப்புறச்செய்தது. சைவசமய நெறித்துறையின் ஓர் சிறந்த தொண்டரைத் தமிழகம் இழந்து நிற்கின்றது.

தருமபுர ஆதீனம் கண்காணித்துவரும் எண்ணற்ற ஆலயங்களில் சிலவற்றைக் காணும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. ஆலயங்களை அழகுற வைத்துள்ள பான்மை, அங்குத் தமிழை வளர்க்கும் தன்மை, ஆலயத் திருப்பணிகளை எடுத்துமுடித்த பெருமை - இவையனைத்தும் தருமபுர ஆதீனத்தின் சிறப்பின் சின்னங்கள். இத்துணை புகழுக்கும் ஆணிவேராய் அமைந்திருந்தவர் 25-வது மகா சந்நிதானம் ஆவார்கள். திருநள்ளாறு தேவாலய குடமுழுக்கன்று நானும் பாண்டிச்சேரி ஆளுநர் திரு. ஜெட்டி, முதலமைச்சர் திரு. பரூக் மரக்காயர் யாவரும் கலந்துகொள்ளும்

வாய்ப்பினைப் பெற்றோம். அன்றுதான் முதன்முதலில் 25-வது மகாசந்நிதானத்தைச் சந்திக்கின்ற வாய்ப்பையும், அவர் கரத்தால் பொன்னாடை பெறுகின்ற பாக்கியத்தையும் பெற்றேன். அந்த முதல் சந்திப்பிலேயே சந்நிதானத்தின் அன்பும் அருளும் என் சிந்தையில் அகலா இடம் பெற்றுவிட்டன.

25-வது சந்நிதானத்தை இயற்கை பறித்துக்கொண்டாலும், அன்னாரின் பண்பும், உழைப்பும், அன்பும் அருளும், சைவ நெறித் தொண்டும் - தருமை ஆதீனத்தால் வழிவழி காப்பாற்றப்படும் என்ற நம்பிக்கையில் நாம் ஆறுதல் பெறுகின்றோம்.

மாண்புமிகு. எஸ். இராமசாமி உள்துறை அமைச்சர்,
புதுச்சேரி.

வணக்கத்திற்குரிய மகாசந்நிதானம் அவர்களுக்கு,

தாங்கள் தருமை ஆதீன கர்த்தராகப் பட்டமேற்றிருப்பது எங்களுக்குப் பெருமகிழ்ச்சி. பக்திநெறி வளர்ப்பதிலும், தமிழ் வளர்ச்சி பேணுவதிலும் தருமை ஆதீனம்தன்னிகரில்லாப்பெரும் புகழ்பெற்றது.

அந்தப் பாரம்பரியத்திற்குப் புகழ்ஒளி சேர்க்கும் வகையில் தங்கள் பட்டம் அமையும் என்ற தமிழ்ப்பெருமக்களின் பேராவலையும் எனதவாவினையும் தெரிவித்து வணங்குகிறேன்.

கே. எஸ். நரசிம்மன் இந்து சமய அறநிலைய
B. A., B. L., I. A. S. ஆணையர்.

நம் தமிழ்நாடு, ஞானத்தவ முனிவர்கள் பலர் தோன்றி வாழ்ந்த சிறப்புடையது, அவர்களுள், குருஞான சம்பந்தர் என்னும் அருந்தவ முனிவர் பெருந்தகையால் நிறுவியருளப் பெற்றது தருமபுர ஆதீனம். அதன் 25-ம் குரு முதல்வராக எழுந்தருளி அருளாட்சி புரிந்து வந்தவர்கள், கயிலைக் குருமகா சந்நிதானம் என வழங்கும் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஆவர்.

அவர்கள் தமது ஆதீனம், திருக்கயிலாய பரம்பரையைச் சார்ந்தது என்னும் வரலாற்று நெறியின்படி, தமது வாழ்நாளில் திருக்கயிலாய யாத்திரைக்குச் சென்று, கயிலாய தரிசனம் புரிந்து வந்த சிறப்புடையவர்கள். ஆதலின், இவர்களைக் கயிலைக் குருமணி என்றே பக்தர்கள் அனைவரும் புகழ்ந்து போற்றிப்பாராட்டி வருகின்றனர்.

ஆதீனக் கோயில்களில் பூசைகளும் விழாக்களும் வழிபாட்டு நிகழ்ச்சிகளும் உரிய முறைப்படி ஒழுங்காக மிகவும் நல்ல முறையில் நடைபெறும் வண்ணம், ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் மிகச் சிறப்பாகக் கண்காணித்து அருளாட்சி செலுத்தி வந்தார்கள். அவர்தம் அறிவாற்றல்களும், ஆட்சித் திறனும், கொடை வண்மையும் யாவராலும் வியந்து போற்றப் பெறுகின்றன. எத்தனையோ எல்லையில்லாத பல சமய நிறுவனங்களுக்கும், கல்வி அமைப்புக்களுக்கும், கோயில் திருப்பணிகளுக்கும் பொதுமக்கள் நலத் தொண்டுகளுக்கும், நாட்டு நலச் செயல்களுக்கும், கலை வளர்ச்சிக் கழகங்களுக்கும், மருத்துவ மனைகளுக்கும் அவர்கள் மனமுவந்து ஏராளமாக நன்கொடைகளை வழங்கியிருக்கின்றார்கள்.

இங்ஙனம் பல்லாற்றானும் சிறந்து திகழ்ந்திருந்த மகா சந்நிதானம் அவர்கள் "இறக்க முத்தி தரும் தலம்" எனக் கூறப்பெறும் காசிக்குச் சென்று, விசாலாட்சியம்மை சமேத விசுவநாதப்பெருமானை வழிபட்டு மகிழ்ந்து, காசியிலேயே திருவருளில் கலந்து பரிபூரணம் அடைந்தமை வியந்து போற்றுதற்குரிய சிறந்த நல்ல பேறு ஆகும்.

அத்தகைய பேறுபெற்ற கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களுக்கு, எனது அன்பும் பண்பும் மிக்க அஞ்சலியினைச் செலுத்துவதுடன், அவர்களுக்குப் பின்னர் தற்போது ஞான பீடத்தில் எழுந்தருளியுள்ள 26வது மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களுக்கும் என் அன்பார்ந்த வணக்கங்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். குருபூசை விழா சிறப்புற நிகழ்க! தருமை ஆதீனம் தழைத்தினிது ஓங்குக.

திரு. கே. இராஜா துணை ஆணையர் - சென்னை
பி. ஏ., பி. எல்.

ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களுக்கு வணக்கம் தெரிவித்து எழுதிக்கொண்டது.

மகாசந்நிதானம் அவர்கள் ஞானபீடாரோகணம் செய்து திருமடத்தில் அதிபராய் விளங்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் மகா சந்நிதானத்திற்கு அடியேனுடைய வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். சந்நிதானத்தின் அருளாட்சி ஒளி வீசி எல்லோரும் பயன்பெற எல்லாம் வல்ல ஸ்ரீ செந்தில் ஆண்டவனைப் பிரார்த்தித்துக்கொள்கின்றேன்.

கடிதம்

கி. இராமலிங்கம் எம். ஏ.,

'தமிழ் மணம்'
சென்னை - 30
16—2—1972

அருள் நலம் சான்ற குருபரனார் அவர்களுக்கு,
தொழுது ஏத்தி எழுதிக்கொள்வது.

பட்டமேற்றபோது, உரையாடி உவகைபூண வாய்க்காது போனமைக்கு ஈடுசெய்துகொள்ள, 1—2—1972 இல் அங்கு வந்தேன். வந்த எனக்கு எதிர்பாராத ஒரு பெரும்பேறு கிட்டிற்று. தருமையாதீனத் திருமடத்தின் பூசைமடம் வழிபாடு, குருமூர்த்தத் திருக்கோயில் சேவை, துர்க்காதேவி வழிபாடு, தருமைப் பழங்கோயில் பூசை, மாயூரநாதர் வழிபாடு, குமரக் கட்டளை முருகப்பிரான் வழிபாடு இவையாவும் முறைப்படி செய்யவும், மகாசந்நிதானத்தில் பெற்று அருள் ஏற்றியளித்த பிரசாதங்களைப் பெறும்பேறு பெறவும், கிடைத்தது. மாயூரத் திருவீதிகளில் குருபரனார் உலாவரும் உவகைப்பெருக்கும் காட்சியைக் கண்டு வணங்கவும், அன்பநாதபுரம் அறமனையில் நடைபெற்ற பாராட்டு விழாவில் கலந்து களிக்கவும், குருபரனார் அவர்கள் அருளுரையைச் செவிமடுத்து இன்புறவும் வாய்த்தது.

மறுநாள் (2—2—'72) தருமையில் மகாசந்நிதானத்தைச் சேவித்து மகிழ்ந்தேன். உரையாடக் கிடைத்தபொழுது சிறிதேயாயினும், அங்குக் குவிந்துகிடந்த பல வேலைகளின் செறிவில், அவ்வளவுநேரம் அருளுரை பகர்ந்ததே மிகையென எண்ணுமாறு இருந்தது. சொல்லால் வாழ்த்தியதுடன், பட்டால் போர்த்தியும் அருள்புரிந்தீர்கள்: அன்பின் அருட்பாங்கினுக்கு நன்றிகூர்ந்தேன். மகாசந்நிதானத்தின் அருளிருந்தவண்ணம் படைக்கப்பெற்ற அமுது; தனிச்சுவையுடன் திகழ்ந்தது, அருளன்பு உடன்மிடைந்த உறுபொருள்களாயினமையின், ஒவ்வோர் இனமும், செவ்விய மணமும், தோற்றமும், சுவையும் ஒருங்கிணைந்து விளங்கின. திருமடத்து உணவு இவ்வாறு அமைவதே, பெரிதும் பொருத்தமாகும் எனப் போற்றிக் கொண்டே அருந்தி அகங்குளிர்ந்தேன். உறைப்பும், வேண்டலாகா வாசனைப் பொருள்களும் இன்றிச், 'சாத்துவிக'ப் பண்பினை வளர்க்கும் பண்டங்களாக அவை இருந்தன.

உணவு கொள்ளும்போது ஒரு நினைவு என்னுள்ளத்தில் உறுத்திக்கொண்டேயிருந்தது, அது, மகாசந்நிதானத்தில் அதுபோது (பகல் 2 மணி) வரைக்கும், நிவேதனம் பெறுமல், இருந்

ததே. 'இன்றன்று என்றுமே இந்நிலை' என்று அறிந்த போது, மேலும் கவன்றேன். எனது பணிவான வேண்டுகோள்–அன்பின் உரிமையால் செய்துகொள்வது–உணவு நேரம், உறங்கும் நேரம், உரையாடும் நேரம் இவற்றை மகாசந்நிதானத்தின் திருமேனி நலம் தாழாத வகைக்கும், இப்போது செறிந்துள்ள வேலைகளைச் சமாளிக்கும் வகைக்கும், மாற்றியமைத்துக்கொள்ள வேண்டும் என்பதேயாகும். ஒவ்வொன்றுக்கும் காலத்தை வரையறுத்துக்கொண்டு, அவ்வக்காலத்தில் அததனைப்புரிந்து, மேனிப்பாங்கு குன்ருவண்ணம் உணவு நேரம், ஓய்வு நேரங்களை ஒழுங்குபடுத்திக்கொண்டு, உரிய பலரும் அறிய, இவ்வட்டவணையைத் தெரிவித்துவிடுவது மகாசந்நிதானத்திற்கு அரிதான செயலாகாது.

மகாசந்நிதானத்தின் மேனிநலம் மேன்மையுறப்பெற்று, திருமடத்தின் அருட்செயல்பொருட்செயல்களை, இன்னமும் திறம்பெற ஆற்றுவதற்கு, வாய்ப்பாக இருக்கவேண்டும் என்னும் ஆவல் உந்த, இதனை எழுதத்துணிந்தேன். மிகைபட நடந்துவிட்டேன் என்றுகருதாமல், அக்கருத்து திருவுள்ளத்தில் சிறிதளவுதோன்ற முற்படினும், என்னைப்பொறுத்தருளி, எனது பணிவானவேண்டுகோளை ஏற்றுக்கொள்ளக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

மகாசந்நிதானத்தை அடிக்கடிசேவித்து, அளவளாவி, மனநிறைவுபெற விருப்பம் நிரம்ப எழுகின்றதாயினும், அங்கு உள்ள பல பெரும்பணிகளுக்குரிய நேரத்தை நான் வீணுக்கிவிடுவேனே என்னும் அச்சம், என் விருப்பத்தைச் செயலாக்கிக்கொள்ளும் துணிவு தரவில்லை. எனினும், குருபரனாக வீற்றிருந்து அருளாட்சிபுரியும் காட்சியை அவ்வப்போது சேவித்துவக்கும் அவா உந்தாமல் இல்லை.

மகாசிவராத்திரி விழாவினுக்கு, தருமையாதீனப் பிரசார நிலையத்திற்குச்சென்றிருந்தேன். சிறப்பாகநடந்தது. வித்துவான் தவத்திரு, மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் மிக்க ஆர்வத்துடன் நிகழ்ச்சிகளை அமைத்தும் அவற்றில் ஈடுபட்டும் வருகிருர்கள். அடுத்த சிவராத்திரி விழாவை, இரவு முழுதும் நிகழ்த்தத் திட்டம் வகுப்பதாகப் பேசினர்கள். நான் அங்கிருந்த போது, கயிலைக் குருபரனுர் அவர்கள் அருளாணைப்படி அவர்களுடன், சிவராத்திரி முழுதும் பல திருக்கோயில்களில் வழிபாடாற்றிய நினைவு எனக்கு வந்தது.

மகாசந்நிதானத்தின் அன்பின்கனிவினை என்றும் போற்றிப் பணிந்துவரும்,

கீ. இராமலிங்கம்.

செய்திகள்

தருமை ஆதீனத்திற்கு தஞ்சை மாவட்ட ஆயர் அவர்கள் வருகை

தருமை ஆதீனம் 26ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தைப் பார்க்க தருமபுரத்துக்குத் தஞ்சை மறை மாவட்ட ஆயர் (Bishop) மேதகு சுந்தரம் ஆண்டகை அவர்கள் 23—2—'72 அன்று பகல் 11-15 மணி அளவில் வந்தார்கள். ஆதீன முறைப்படி ஸ்ரீமத் திருநாவுக்கரசுத் தம்பிரான் சுவாமிகள் மேதகு ஆயரவர்களுக்கு மாலையிட்டு வரவேற்றார்கள். மேதகு ஆயர் அவர்கள் ஆதீன நூலகம், பண்டாரக்கட்டு முதலிய பல பகுதிகளையும் பார்வையிட்டு மகிழ்ந்தார்கள். ஆதீன மடம் ஷண்முக விலாசத்திற்கு வந்ததும் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் மறைத்திரு ஆயரவர்களை மாலையிட்டு வரவேற்றார்கள். மறைத்திரு. ஆயரவர்களும் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்திற்கு மாலை அணிவித்தார்கள். பிறகு ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமும் மேதகு ஆயரவர்களும் 45 நிமிடம் இனிதுரையாடினார்கள். அவ்வமயம் வெளிவந்த கருத்துக்களாவன.

கடவுள் உண்டு என்று நம்பும் எல்லாப் பிரிவினரும் மனம் ஒத்து ஒன்று சேர்ந்தால் நிலைத்த பயன் பெருக்கலாம். உலகில் உள்ள மக்கள் பலவேறுபட்ட உணர்வுடையவர்கள். ஆகவே அவரவர் நம்புகின்ற வழியில் அவரவர்கள் மனம் ஈடுபடுகின்ற தெய்வங்களை ஏற்கத்தக்க நிலையில் மதப்பிரசாரம் செய்து கடவுள் கொள்கையைப் பொதுவாகப் பரப்புவதால் மாறுபாடு எதுவும் ஏற்படாது. "மனம் கொள்ளாத ஒரு வழிக்கு மக்களை மதமாற்றம் செய்வதில் மனம் ஒன்றி ஏற்றதாக - நிலையான மாற்றமாக அது அமையாது; மக்கள் வழியில்சென்று அவரவர்க்கும் உற்ற உதவிகளைச் செய்து பரிவு காட்டுவதும் சமயத்தொண்டில் அடங்கும் என்பதும், பாமரர்களையும் கடவுள் நம்பிக்கையில்லாதவர்களையும் உய்வு வழியில் திருப்புவதற்கு, மக்கள் பணியில் யாரிடமும் வெறுப்புணர்வில்லாது பொதுப் பரிவுணர்வோடு அம்மக்களோடும் கலந்து பழகித் திருத்துவதே அமையும்" என்ற பொதுக்கருத்துக்கள் வெளியிடப்பட்டன. இங்கு வந்து ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானங்களைக்

கண்டு சமயப்பணிகளில் ஒருமைப்பாடு குறித்துப் பேசவும் கலந்துறவாடவும் விருப்பம் இருந்தும் அறிமுகமில்லாத நிலையில் தருமை நுழைவாயிலாக உள்ள சண்முகம் வளைவு வழியாகப் பலமுறை சென்றதாகவும், இப்போது இங்குவந்து ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தைக்கண்டு மனம்விட்டுக் கலந்து பேச வாய்ப்புக் கிடைத்ததில் மகிழ்வு கொள்வதாகவும் இது போலவே ஸ்ரீலஸ்ரீமகாசந்நிதானமும் தஞ்சையில்உள்ள தனதுமாளிகைக்கு வருகை புரியவேண்டும் என்றும் மேதகு ஆயரவர்கள் அழைத்தார்கள். கூட்டங்கள் நடத்துங்காலத்தில் இரு பெருந் தலைவர்களும் கலந்துகொள்வது கடவுட்கொள்கையுடையவர் களிடம் ஒருமைப்பாட்டை உணர்த்த - உலகில் மறுமலர்ச்சி ஏற்பட வழிபிறக்கவும்கூடும் என்றும் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானமும் ஆயரவர்களும் கருத்துத் தெரிவித்துக்கொண்டார்கள். சமயம் வாய்க்கும்பொழுது மீண்டும் மீண்டும் சந்தித்துப் பணிகள் குறித்துக் கருத்துப் பரிமாற்றம் செய்துகொள்வதாகவும் குறிப்பிட்டார்கள்.

திருபுவனத்தில் தருமையாதீனம் 17 ஆவது குருமகாசந்நிதானத்தின் குருபூஜை விழா

தருமையாதீனம் 17 ஆவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ மாணிக்கவாசக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் குருபூஜை விழா 3—3—72 வெள்ளிக்கிழமையன்று திருபுவனம் சந்நிதித் தெருவிலுள்ள குருமூர்த்தத்தில் மிகச்சிறப்பாக நிகழ்ந்தேறியது.

காலை 9 மணி அளவில் குருமூர்த்தத்தில் விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனைகள் நிகழ்த்தப்பெற்றன. மதியம் மாகேசுவரபூஜை நடைபெற்றது. மாலை திருமுறைப் பாராயணமும், சொற்பொழிவுகளும் நடைபெற்றன.

தருமையாதீனப்புல்வர், சித்தாந்தக்கலைமணி, மகாவித்வான் திரு. சி. அருணைவடிவேல் முதலியார் அவர்கள் 'சிவபோக சாரம்' என்ற பொருள்பற்றியும், தருமையாதீனப் பல்கலைக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர், புலவர். திரு. இரா. செல்வக் கணபதி 'சொக்கநாதவெண்பா' என்ற பொருள்பற்றியும், திருக்கருகாவூர் சமயப்பிரசாரகர் திரு கோ. சிவஞானம்அவர்கள் 'குருவழிபாடு' என்ற பொருள்பற்றியும் சொற்பொழிவாற்றினர்.

மாலை 7 மணியளவில் தருமையாதீனம் 26 ஆவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் திருபுவனம் எழுந்தருளி குருமூர்த்த வழிபாடு நிகழ்த்தி அன்பர்களுக்குப் பிரசாதம் வழங்கியருளினார்கள். பின்னர், தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருபுவனம் ஸ்ரீ கம்பகரேசுவரசுவாமி திருக்கோயிலுக்கு எழுந்தருளி, வழிபாடாற்றித் தருமைக்கு எழுந்தருளினார்கள்.

திரளான மக்கள் குருபூஜை விழாவிலும், சொற்பொழிவு நிகழ்ச்சியிலும் பங்கேற்று நலம் பெற்றனர்.

தருமையாதீனத் திருக்கோயில்களில் :

திருவெம்பாவைச் சொற்பொழிவுகள்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருக்கோயில்களுள் ஆண்டுதோறும் நிகழ்வது போல இவ்வாண்டும் திருவெம்பாவைச் சொற்பொழிவுகள் நடைபெற்றன. முதலில் மாலை 6 மணிமுதல் திருவெம்பாவைப் பாடல்கள் பண்ணிசையுடன் ஓதப்பெற்றன. ஒவ்வொரு திருக்கோயில்களிலும் அன்பர்கள் பலர் வந்து சொற்பொழிவுகளைக் கேட்டு மகிழ்ந்து திருவருள் பெற்றனர்.

31—12—71 வெள்ளிக்கிழமை திருமுல்லைவாயில் ஸ்ரீ முல்லைவனநாதசுவாமி திருக்கோயிலிலும் 6—1—72 வியாழக்கிழமை திருநின்றியூர் ஸ்ரீ லக்ஷ்மிபுரீசுவரசுவாமி திருக்கோயிலிலும், வித்துவான் திரு. வி. சபேசன் அவர்களும், சமயப் பிரசாரகர் திரு. கோ. சிவஞானம் அவர்களும் முறையே பாவை நோன்பு பாவைப் பயன் என்ற தலைப்புக்களில் சொற்பொழிவாற்றினர்.

2—1—72 ஞாயிற்றுக்கிழமை ஆச்சாள்புரம் ஸ்ரீ சிவலோகத் தியாகராஜசுவாமி திருக்கோயிலிலும், 4—1—72 செவ்வாய்க் கிழமை தலைஞாயிறு ஸ்ரீ குற்றம்பொறுத்தீசுவர சுவாமி திருக்கோயிலிலும் 11—1—72 செவ்வாய்க்கிழமை விளநகர் ஸ்ரீ துறைகாட்டும்வள்ளலார்சுவாமி திருக்கோயிலிலும் புலவர், திரு. இரா. செல்வக்கணபதி அவர்கள் திருவெம்பாவை, பாவைநோன்பு. திருவாசகத்தேன், என்ற தலைப்புக்களிலும். திருக்கருகாவூர் திரு. கோ. சிவஞானம் அவர்கள் திருப்பள்ளியெழுச்சி, வழிபாட்டுப் பயன், திருப்பாவை என்ற தலைப்புக்களிலும் சொற்பொழிவாற்றினர்.

5—1—72 புதன்கிழமை கொறுக்கை ஸ்ரீவீரட்டேசுவரசுவாமி திருக்கோயிலிலும், 12—1—72 புதன்கிழமை மாயூரம், ஸ்ரீ காசி விசுவநாதசுவாமி திருக்கோயிலிலும். திருநெறிச் செம்மல், நல்லிசைப்புலவர் வித்துவான், திரு. வி. சா. குருசாமி தேசிகர் "பாவையும் பள்ளியெழுச்சியும்" "திருவெம்பாவை" என்ற தலைப்புக்களில் சொற்பொழிவாற்றினார்கள்.

வேளூரில் தைச்செவ்வாய்த் திருவிழா

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான வேளூர் ஸ்ரீவைத்தியநாதசுவாமி திருக்கோயிலில் ஸ்ரீசெல்வ முத்துக்குமாரசுவாமிக்குத் தைச்செவ்வாய்த் திருவிழா, 30-1-72 ஞாயிற்றுக்கிழமை முதல் தொடங்கி 8—2—72 செவ்வாய்க்கிழமை முடிய உள்ள நாட்களில் சிறப்பாக நடைபெற்றது. ஸ்ரீ செல்வ முத்துக்குமாரசுவாமிக்கு, தை மாதத்தின் கடைசிச் செவ்வாய்க் கிழமையை இறுதித் திருநாளாகக் கொண்டு நிகழ்த்தப்படும் விழாவாதலின் தைச்செவ்வாய்த் திருநாள் என்றே இவ்விழா வழங்கப்பெறும்.

சிறப்புத்திருநாட்களாக 30—1—72 அன்று சகோபுரத்தில் மயில்வாகனக் காட்சியும், 7—2—72 அன்று திருத்தேர்த் திருவிழாவும், 8—2—72 அன்று சித்தாமிர்த தீர்த்தத்தில் ஸ்ரீ செல்வ முத்துக்குமாரசாமி தீர்த்தங்கொடுத்தருளுதலாகிய தீர்த்தத் திருவிழாவும் நடைபெற்றன.

இத்திருநாட்களின் பத்து நாட்களிலும் ஸ்ரீ செல்வமுத்துக் குமாரசாமி சிறந்த நாதசுர இன்னிசைகளுடன் திருவீதிக்கு எழுந்தருளி அன்பர்களுக்கு அருள் வழங்கும் காட்சி கண்டு மகிழத்தக்கது.

இத்திருவிழா நாட்களில் பிரசங்கசபா மண்டபத்தில் மாலை 6 மணி அளவில் சமயச் சொற்பொழிவுகள் நடைபெற்றன.

31—1—72 திங்கட்கிழமையன்று விழுப்புரம் திருக்குறள் திரு வீ. முனுசாமி பி. ஏ., பி. எல்., அவர்கள் "முத்துக்குமாரசுவாமி திருவருட்பா" என்ற தலைப்பில் சொற்பெருக்காற்றுகையில் தருமையாதீனம் பத்தாவது மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிக பரமாசாரிய சுவாமிகள், ஸ்ரீ செல்வமுத்துக்குமாரனின் பெருமைகளைக் கூறிப் போற்றும் முறைகளை விளக்கிப் பேசி அனைவரையும் மகிழ்வித்தார்கள். வேளூர் சப் இன்ஸ்பெக்டர், திரு. கே. குணபூஷணம் அவர்கள், "முருகன்

பெருமை" என்ற தலைப்பில் இன்னிசைக்கதை நிகழ்த்தினார்கள்.

1—2—72 செவ்வாய்க்கிழமை அன்று கந்தபுராணத்துள் நன்றிமறந்தவர்களுள் விஞ்சி நிற்பவர்கள் தேவர்களா? அசுரர்களா? என்ற தலைப்பில் திருச்சி தேசியக்கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர், திரு. இரா. இராதாகிருஷ்ணன் எம். ஏ., அவர்களை நடுவராகக்கொண்டு பட்டிமண்டபம் நிகழ்ந்தது.

நன்றிமறந்தவர்களுள் விஞ்சி நிற்பவர்கள் தேவர்களே என்ற கட்சியில் மாயூரம் அ. வ. அ. கல்லூரி விரிவுரையாளர், திரு. அ. கலியபெருமாள் எம். ஏ., அவர்களும், மாயூரம் அரசினர் மகளிர் உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியை வித்துவான், திருமதி. கு. நீலாம்பாள் அவர்களும், பூம்புகார் பேரவைக் கல்லூரி, திரு. அ. அறிவொளி எம். ஏ ; அவர்களும் வாதிட்டனர்.

நன்றிமறந்தவர்களுள் விஞ்சி நிற்பவர்கள் அசுரர்களே? என்ற கட்சியில், மாயூரம் அ. வ. அ. கல்லூரிப் பேராசிரியர், திரு. தி. வ. காந்திமதிநாதன் எம். ஏ., அவர்களும், மாயூரம் அரசினர் மகளிர் உயர்பள்ளித் தமிழாசிரியை, வித்துவான், திருமதி. துரைவள்ளி அவர்களும், தருமையாதீனப் பல்கலைக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் புலவர், திரு. இரா. செல்வக்கணபதி அவர்களும் வாதிட்டனர். நன்றிமறந்தவர்கள் அசுரர்களே என்று பலசான்று காட்டி நடுவர் தீர்ப்புக் கூறினார்கள்.

2—2—72 புதன்கிழமை திருச்சிராப்பள்ளி திருவாசகமணி, திரு. கே. எம். பாலசுப்பிரமணியம் பி. ஏ., பி. எல்., அவர்கள் "முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ்" என்ற தலைப்பில் விரிவுரையாற்றினார்கள். அடுத்து பவானி, திரு. மு. கண்ணப்பர் அவர்களால் "வள்ளித் திருமணம்" இன்னிசைக் கதையாக நிகழ்த்தப்பட்டது. அன்பர்கள் பலர் கேட்டு மகிழ்ந்தனர்.

சென்னை சமயப்பிரசார நிகழ்ச்சிகள்

திருவள்ளுவர் விழா

சென்னை, சமயப்பிரசார நிலையத் தமிழ்ப்புலவர் வகுப்புப் பழைய மாணவர்கழகத்தின் சார்பில் நிலைய மன்றத்தில் 23-1-72 ஞாயிற்றுக்கிழமை இரவு பொங்கல்விழா திருவள்ளுவர் விழாவாகக் கொண்டாடப் பெற்றது,

திரு. எஸ். ஞானப்பிரகாசம், புலவர். திரு. ந. இராமலிங்கம் இருவரும் கடவுள் வணக்கம் இசைத்தனர், புலவர் திரு. த. கேசவன் அவர்கள் அனைவரையும் வரவேற்றார், திருக்கோயில் ஆசிரியர் புலவர். திரு. ந.ரா. முருகவேள் எம். ஏ., எம். ஓ. எல்., தொடக்கவுரையாற்றினார்.

வித்துவான் தவத்திரு. மகாலிங்கத்தம்பிரான் சுவாமிகள் தலைமையேற்றுக் கூட்டு வழிபாட்டின் பயன் பற்றியும், புலவர்கள் ஒருங்கிணைந்து செயற்படுவதால் விளையும் நலம்பற்றியும் உரையாற்றி, தருமையாதீனம் 26ஆவது குருமகாசந்நிதானத்தில் அனுப்பியிருந்த ஆசியுரையையும் படித்தார்கள்.

சென்னை, கந்தசாமி நாயிடு கலைக்கல்லூரி தமிழ் விரிவுரையாளர். திரு. தெ. ஞானசுந்தரம் எம். ஏ., அவர்கள் இன்பத்துப் பால் என்பது பற்றிப் பேசுகையில் 'காமத்துப் பாலில் நாடகப் பாங்குபட அமைந்திருக்கும் குறட்பாக்களை விளக்கிக்காட்டி தமிழ்ப் பண்பாட்டைத் திருவள்ளுவர் எத்துணை நாகரிகமாக எடுத்துரைக்கிறார்' என்றமை பற்றி விரித்துரைத்தார்.

சென்னை, புலவர் திரு. மா. நன்னன் அவர்கள் பொருட்பால் பற்றி உரையாற்றுகையில், பொருளின் தன்மையினை விளக்கி அதனை ஈட்டல் காத்தல் பற்றிய திருவள்ளுவர் கருத்துக்களை விளக்கி, அறத்தை வேர் என்றும், பொருளை அடிமரம் என்றும், இன்பத்தைக் கனி என்றும் உருவகப்படுத்திப் பேசினார்.

அடுத்து திரு. சு. செல்லப்பன் அவர்கள் அறத்துப்பால் என்ற தலைப்பில் உரையாற்றுகையில், அறம் என்ற அகலில் பொருள் என்ற திரியிட்டு, இன்பம் என்ற சுடர் ஏற்றவேண்டுமென்று விளக்கி, உலகத்து மக்கள் தொகுதியைச் சொல்வகையால் பேய், பிணம், மன்னன், தெய்வம் என நான்கு கூறு படுக்கும் திருவள்ளுவரின் பகுப்பைச் சுட்டி விளக்கினார்.

திரு. தி. சு. செயராமன் அறிக்கை வாசிக்க, புலவர், திரு. ந. இராசு நன்றி நவில இரவு 9 மணிக்குக் கூட்டம் நிறைவெய்தியது.

சைவசித்தாந்தக் கல்லூரிப் பரிசளிப்பு விழா.

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களின் கனகாபிஷேக நினைவாக அமைக்கப்பெற்றுப் பல்கலைக் கல்லூரியோடு இணைக்கப் பெற்று நிகழும் சைவ சித்தாந்தப் பயிற்சி

வகுப்பில் நான்காம் ஆண்டு இரண்டாம் ஆண்டு மாணவர்களுக்குத் தேர்வுகள் நிகழ்த்தி முதல் வகுப்பில் தேர்ந்த முதல் மூன்று மாணவர்களுக்கு ஆண்டுதோறும் வழங்கப்பெறும் பரிசளிப்பு விழா 26—2—72 சனிக்கிழமை மாலை 2-30 மணிக்கு நிகழ்ந்தது.

மதுரைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத்தலைவர் "செந்தமிழ் வித்தகர்' பேராசிரியர், திரு. அ. ச. ஞானசம்பந்தம் M. A., அவர்கள் தலைமையேற்று விழாவுரையாற்றினார்கள்.

ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் சைவசித்தாந்த வகுப்பில் மாணவர் ஊக்கம் காட்டிப் பயிலுதற்பொருட்டு வழங்கியருளிய பரிசுத் தொகையை, பரிசுபெற்ற மாணவர்கட்கு விழாத் தலைவர் வழங்கி வாழ்த்தினார்கள்.

பரிசு பெற்ற மாணவர்கள் :-

நிறைநிலை (நான்காம் ஆண்டு)

1. எஸ். பாலுசாமி — முதற் பரிசு ரூ. 100
2. இரா. நாகலக்ஷ்மி — இரண்டாம்பரிசு ரூ. 75
3. சீ. வைத்தியநாதன்— மூன்றும் பரிசு ரூ. 50

முதனிலை (இரண்டாம் ஆண்டு)

1. அ. கலையரசி — முதற் பரிசு ரூ. 50
2. ஆர்.கிருஷ்ணகுமாரி — இரண்டாம்பரிசுரூ. 35
3. ஜி. இராஜேந்திரன் —மூன்றும் பரிசு ரூ. 25

கல்லூரி முதல்வர் திரு. வி. சா. குருசாமி தேசிகர் வரவேற்புரை நிகழ்த்தினார்கள்.

சித்தாந்தப் பேராசிரியர் மகாவித்துவான். திரு. சி. அருணை வடிவேலு முதலியார் அவர்கள் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களால் தோற்றுவிக்கப்பெற்ற சைவ – சித்தாந்தக் கல்லூரியைப் புரந்துவரும் 26 ஆவது ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் அருட்கொடையைப் போற்றிப் பாராட்டி நன்றியறிதலைப் புலப்படுத்தினார்கள்.

கல்லூரிப் பேராசிரியர் திரு. வி· சபேசனார் நன்றி நவின்றார்.

உ

குருபாதம்

அறநெறியில் நிற்போர்க்கு
அரியதோர் நல் வாய்ப்பு :

'ஞானசம்பந்தம்'

'தருமையாதீனத் திங்கள் இதழ்'

தெய்விகத் திருமரபில், திருக்கயிலாய பரம்பரையில் திருநெறிய தமிழ் வளர்க்கும் தருமையாதீனத்தின் திங்கள் வெளியீடு நமது ஞானசம்பந்தம். மக்கள் ஊன சம்பந்தம் மாற்றி ஞானசம்பந்தம் அளிக்கும் நலமிக்க நல்லேடு! தமிழ் கூறு நல்லுலகம், கடல் கடந்த நாடெல்லாம், முப்பதாண்டு முழுநிலவாய் ஒளிவீசி ஆற்றிய பணிகள் ஆயிரம் ஆயிரம்!

இலக்கிய வாழ்வில் எழுச்சி; சமய உணர்வில் புத்துணர்ச்சி; கவிதை உலகில் புதுமை; கட்டுரை வடிவில் நல்லாக்கம், சிந்தனைச் செழிப்பில் விழிப்புணர்ச்சி; தெய்விக வாழ்வில் அருளாக்கம், இத்தனையும் நல்கி - இளஞாயிறென இயங்கிவரும் பேரேடு!

இதோ! புதுமை பூத்து, புதுப்பொலிவு தாங்கி, அன்பர்கள் யாவர்க்கும் அற உணர்வைத் தூண்டி வளர்க்க அன்போடு வருகிறது!

- சமய உணர்வைச் சரித்திரப் பின்னணியில், வடித்தெடுத்த தொடர் கதைகள்!
- தெய்விக எண்ணத்தின் திறங்காட்டும் சிறு கதைகள்!
- சித்திர வடிவில் சிந்தையள்ளும் படக்கதைகள்! ஆன்றோர் வாக்கு, அரும்பெரும் ஆய்வுரைகள்! சுவை பூத்த கவிதைகள்! இலக்கிய ஆய்வுகள்! தடம்புரளாக் கொள்கைவளம்! இன்னும் எத்தனையோ உண்டு; அத்தனையும் கற்கண்டு;

புதுப் பொலிவில் வெளியாகும் பொன்னேட்டைப், புவியுள்ளோர் போற்றிக் கற்றிடுதற்குப் புதியதோர் நல்வாய்ப்பு !

"ஞானசம்பந்தம்"

ஞானசம்பந்தம் ! ஆயுள் முழுதும் உங்கள் அகந் தேடி வருவதற்கு அன்போடு அழைக்கிறது !

ஆயுள் சந்தா அதிகமில்லை - நூறு ரூபாய் !

வசதிபடைத்தோர் ரூபாய் நூறு செலுத்தி, ஆயுள் உறுப்பினராய் ஆவதற்கு முந்துங்கள் !

ஏனையோர், தவணைமுறையில் ஐம்பதாய், இருபத் தைந்தாய், பத்தாய், திங்கள்தோறும் செலுத்தி ஆயுள் உறுப்பினராய் ஆவதற்கும் இடமுண்டு. உங்கள் உரிமையை மாற்றியமைக்கவோ, மற்றவர்கட்கு நல்க வோ ஞானசம்பந்தம் நன்கு உதவிசெய்யும். இரண்டு திங்களில் ஐம்பது அன்பர்கள் ஆயுள் உறுப்பினராய்ச் சேர்ந்துள்ளனர்.

பேரருளைப் பெற்றுய்ய நூறு ரூபாய் பெரிதல்ல !

ஞானசம்பந்தம் நல்லோரை அழைக்கிறது ! மூல பண்டாரந்தர முனைந்து வருகிறது ! ஆயுட்சந்தா செலுத்தி ! அருள்மிக்க நல்விதழைப் போற்றிச் சிறப்பீர் !

புகழ் பூத்து அருள் பெறுவீர் !

எதிர்காலம்

ஜோதிஷார்ணவம்
திரு. K. முத்துஜோதிடர்

(விரோதிகிருதுஸ்ரீ பங்குனிமீ 1உ முதல் 30உ முடிய)
(14—3—72 முதல் 12—3—72 முடிய)

மேற்படி விரோதிகிருதுஸ்ரீ மாசிமீ 30உ திங்கட்கிழமை அவிட்டம் 40-23 நாழிகைக்குமேல் சதய நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் உதயாதி நாழிகை 47·59 விநாடிக்கு தனுர்லக்னத்தில் ஸ்ரீ லோகரக்ஷகரான ஸ்ரீ சூரியபகவான் கும்பராசியிலிருந்து மீனராசிக்குப் பிரவேசம்செய்கிருர். ஷெ பங்குனிமாதம் 3ம் தேதி குருவாரம் சாந்திரமானப்படி சைத்ரசுத்த பிரதமை. உத்திரட்டாதி நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் சாந்திர சம்வத்சராதி வசந்த நவராத்திரி பூஜாரம்பம். ஷை பங்குனி மாதம் அர்த்தராத்திரியில் தனுர் லக்கினத்தில் மாசபிரவேசமும் குரு இருக்கும் லக்கினமும் ஷை. குருவாரமே சாந்திர வருஷ பிரவேசமும் குருவுக்கே ராஜா மந்திரி இருபதவிகளும் பரிதாபி வருஷத்துக்குக் கிடைப்பதாலும், ஷை மாதம் மிகுந்த மங்களகரமாயும் ஜனங்களுக்கெல்லாம் நல்ல வழியில் மனம் மாறுதலும், எங்கும் ஆஸ்தீக பிரசாரம் அதிகமாகி தர்மபுத்தி அதிகமாகுதலும் சுபிக்ஷமும் தெய்வசக்தி பிரகாசித்தலும் பாரதபூமிக்கு அந்நிய தேசங்களில் மிகுந்த உயர்வும் தர்மம் ஓங்குதலும் ஏற்படும். விந்தியோத்திர தேசங்களிலும் அன்னிய நாடுகளிலும் மதமாச்சர்யங்கள் அதிகமாகும் பாரத பூமிக்கு அன்னிய நாடுகளால் பயமில்லாமல் இருக்க பிரஜைகள் பிராசீன தர்மபலத்தை அதிகமாய், கொண்டாடிக்கொண்டு இருக்கவேணும். நாஸ்தீகம் வளர்ந்தால் உலகமே மாறிவிடும். கடவுள் காப்பாராக

1. மேஷம் – அசுவதி – பரணி – கார்த்திகை ¼

மேஷராசி 9 பாதங்களும் பூர்ணமாக சுபமாகவே இருக்கும். தீராத வியாதி நிவர்த்தியாகும் ஜீவனம் விருத்தி அடையும்.

சுபங்கள் நடக்கும். மேலோர் பெரியோர் ஆசிகள் கிடைக்கும். தெய்வசக்தி பிரகாசிக்கும். (செவ்வாய், புதன் சுபமாகும்)

2. ரிஷபம் – கார்த்திகை ¾ – ரோஹிணி – மிருகசீர்ஷம் ½

ரிஷபராசி 9 பாதங்களும் மிச்சிரமான பலன்களைக் கொடுக்கும். கிரய விக்ரயங்கள் ஏற்படும். வைத்திய செலவு அதிகமாகும். வரவு செலவு சமமாக இருக்கும். அடிக்கடி உறவினர்களுடைய சேர்க்கை ஏற்பட்டுக்கொண்டு இருக்கும். நஷ்டமான பொருள் வந்துசேரும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

3. மிதுனம் – மிருகசீர்ஷம் ½ – திருவாதிரை–புனர்பூசம் ¾

மிதுனராசி 9 பாதங்களும் பூர்ணமாக சுபமாகவே இருக்கும். குடும்பத்தில் சுபகாரியங்களும் அடிக்கடி சஞ்சாரமும் வாகனங்கள், கால்நடைகள் வாங்குதலும் ஏற்படும். தேர்வில் முதல்தரமாக ஜெயம் உண்டாகும். புதிதாக உத்தியோகம் கிடைக்கும். தூரதேச யாத்திரை ஏற்படும். (சனி, ஞாயிறு சுபமாகும்)

4. கடகம் – புனர்பூசம் ¼ – பூசம் – ஆயில்யம்.

கடகராசி 9 பாதங்களும் சுபமாக இருக்கும். தனதான்யங்கள் விருத்தியாகும். சகல காரியங்களும் தாமதத்தோடு ஜெயத்தைக் கொடுக்கும். உலக பிரசித்தி உண்டுபண்ணும். புதிதாக ஸ்திரமாயும் சரமாயும் காரியங்கள் ஆரம்பம் ஆகும். விவாகாதி சுபகாரியங்கள் நடக்கும். (திங்கள், செவ்வாய் சுபமாகும்)

5. சிம்மம் – மகம் – பூரம் – உத்திரம் ¼.

சிம்மராசி 9 பாதங்களும் மிச்சிரமான பலனைத்தரும். ஜீவனம் ஓங்கும். வரவுக்கு அதிகமான செலவுகள் ஏற்படும். அடிக்கடி மனக்குழப்பம் உண்டுபண்ணிக்கொண்டு இருக்கும். பூர்வபுண்ணிய பலத்தால் சாதிக்க முடியாததெல்லாம் சுலபமாக சாதிக்க முடியும். (புதன், வியாழன் சுபமாகும்)

6. கன்னி – உத்திரம் ¾ – ஹஸ்தம் – சித்திரை ½.

கன்னியாராசி 9 பாதங்களும் பூர்ணமாக சுபமாகவே இருந்துகொண்டு இருக்கும். ஸ்தாவர ஜெங்கம சொத்துக்

கள் சேரும். ஜீவனத்தில் கொஞ்சம் மாறுதல் ஏற்பட்டு மேல்பதவி கிடைக்கும். புத்திராதிகளால் நன்மை உண்டு பண்ணும். மேலோர் பெரியோர்களின் அன்பினால் சகலமான காரியமும் சாதிக்க முடியும். (வெள்ளி, சனி சுபமாகும்)

7, துலாம் – சித்திரை ½ – சுவாதி – விசாகம் ¾

துலாராசி 9 பாதங்களும் பூர்ணமாக சுபபலனைத்தரும். தெய்வபலம் அதிகமாகும். சஞ்சாரம் அதிகமாகும். யக்ஞ யாகாதி பலன்கள் கிடைக்கும். ஜீவனம் உண்டாகும். கிரய விக்ரயத்தில் லாபம் ஏற்படும். உறவினர்களாலும் புத்திராதிகளாலும் நன்மை உண்டாகும் (ஞாயிறு, திங்கள் சுபமாகும்)

8. விருச்சிகம் – விசாகம் ¼ – அனுஷம் – கேட்டை.

விருச்சிகராசி 9 பாதங்களும் மிச்சிரமான பலனைத்தரும். இடம் மாறும். குடும்பத்தொல்லையால் அதிகமாக செலவுகள் உண்டாகும். விவகாரி சுபகாரியங்கள் ஏற்படும் நண்பர்களாலும் உறவினர்களாலும், நன்மை உண்டாகும். ஜீவனம் ஓங்கும். (செவ்வாய், புதன் சுபமாகும்)

9. தனுசு – மூலம் – பூராடம் – உத்திராடம் ¼.

தனூர்ராசி 9 பாதங்களும் மிச்சிரமான பலனைத்தரும். இடம்மாறும். செலவுகள் அதிகமாகும். புதிதான முறையில் தொழில் விருத்தியாகும். புத்திராதிகளால் நன்மை உண்டாகும். தெய்வபலம் ஓங்கும். சகல காரியமும் சுலபமாக சாதிக்க முடியும். குடும்பம் ஓங்கும். (வியாழன், வெள்ளி சுபமாகும்.)

10. மகரம்– உத்திராடம் ¾ – திருவோணம் – அவிட்டம் ½

மகரராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும் உத்தியோகத்தில் உயர்பதவி கிடைக்கும். கீர்த்திபத்திரம் கிடைக்கும். புதிதாக வஸ்திரம் ஆபரணம், ஸ்தாவரம், ஜெங்கமம் முதலிய சொத்துக்கள் சேரும், உலகபிரசித்தி ஏற்படும். அடிக்கடி சஞ்சாரம் ஏற்படும். (சனி, ஞாயிறு சுபமாகும்)

(தொடர்ச்சி 276 ஆம் பக்கம் பார்க்க)

தருமையாதீனப் பல்கலைக் கல்லூரியின் ஸ்ரீ குருஞானசம்பந்தர் மாணவர் கழகம் ஆண்டுவிழா

தருமையாதீனப் பல்கலைக் கல்லூரி ஸ்ரீ குருஞானசம்பந்தர் மாணவர் கழகத்தின் ஆண்டு விழாவும், விளையாட்டுப் போட்டிகளின் பரிசளிப்பு விழாவும் 26—2—72 சனிக்கிழமை மாலை 2-30 மணிக்குத் தொடங்கி நடைபெற்றது.

மதுரைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத்தலைவர் 'செந்தமிழ் வித்தகர்' திரு. அ. ச. ஞானசம்பந்தம் அவர்கள் தலைமையேற்று விழாப் பேருரையாற்றினர்கள். மாணவர் கழகச் சார்பில் கட்டுரை, கவிதை, பேச்சுப் போட்டிகள் நிகழ்த்திச் சிறந்த மாணவர்கட்குப் பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்பெற்றன. விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்கட்குப் பரிசுப் பொருள்களும் சான்றிதழ்களும் அளிக்கப்பெற்றன.

கல்லூரி முதல்வர் திரு. வி. சா. குருசாமி தேசிகர் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினர். பேராசிரியர் திரு. வி. சபேசனர் அவர்கள் நன்றியுரை கூறினர். கழகச் செயலர் அ. செயவேல் கழகத்தின் ஆண்டறிக்கையைப் படித்து நன்றியுரை கூறினர்.

சிதம்பரம் ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோயில் மகாகும்பாபிஷேகம்

சிதம்பரம் ஸ்ரீ சபாநாயகர் திருக்கோயிலில் ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோயிலில் திருப்பணிக்கென்று அன்பர்கள் பலர் கொண்ட திருப்பணிக்குழு ஒன்று அமைக்கப்பெற்று திருப்பணிகள் நடைபெற்றன. திருக்கோயில் முழுவதும் பழுது பார்க்கப்பெற்று, சுதைவேலைகள் செய்து வண்ணம்வைத்து, அஷ்டபந்தனம் சாத்தப்பெற்று 6—2—72 அன்றுகாலை பெரும் பொருட்செலவில் மிகச் சிறப்பாகக் கும்பாபிஷேகம் செய்விக்கப் பெற்றது.

மகாகும்பாபிஷேகத்தை ஒட்டி, கருத்துக்கருவூலமாக வண்ணமலர் ஒன்றும் வெளியிடப்பெற்றது.

யாகசாலை பூஜைகளும் திருமுறைப் பாராயணமும் சமயச் சொற்பொழிவுகளும் முறையாக நிகழ்த்தப்பெற்றன.

தருமையாதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் 4—2—72 அன்று காலை யாகசாலை தரிசனத்திற்கு எழுந்தருளினர்கள். ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களைப் பொது தீக்ஷதர்களும் திருப்பணிக்குழுவினரும் பூர்ணகும்பம் முதலிய கோயில்மரியாதைகளுடன் வரவேற்று அழைத்துச்சென்று தரிசனம் செய்து வைத்தனர். வழிபாட்டின் நிறைவில் திருப்பணிக் குழுத்தலைவர் திரு. நா. மு. பொன்னம்பலம் பிள்ளை அவர்கள் விழாக்குழுவின் சார்பிலும், அன்று மாலை நிகழ்ந்த குருவழிபாட்டின்போது சொந்த முறையிலும் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்திற்குப் பொன்னுடைகள் போர்த்தி மலர்மாலை அணிவித்து வணங்கி ஆசிபெற்றார்கள்.

மேலும் அன்றுமாலை சிதம்பரம் சிவநேசச்செல்வர் நிகழ்த்திய குருவழிபாட்டுப் பந்தலில் அன்பர்கள் பலர் மலர்மாலைகள் முதலியன அணிவித்து ஆசிபெற்றனர். (குருவழிபாட்டு நிகழ்ச்சி 10—2—72 ஞானசம்பந்தம் இதழில் விரிவாகவெளிவந்துள்ளது.)

பல்லாயிரக் கணக்கான அன்பர்கள் மகாகும்பாபிஷேகத்தைத் தரிசித்துத் திருவருள் பெற்றனர்.

(பக்கம் 274 இன் தொடர்ச்சி)

11. கும்பம் – அவிட்டம் ½ –சதயம் – பூரட்டாதி ¾,

கும்பராசி 9 பாதங்களும் மிச்சிரமான பலனைத்தரும். தொல்லைகள் அதிகமாகும். அடிக்கடி சரீரத்தில் வியாதி ஏற்படும் கடன் நிவர்த்தியாகும். இல்லறம் ஓங்கும். அதிகமான உழைப்பின்பேரில் நல்லபலன் கிடைக்கும். பெரியோர்களின் சேர்க்கையால் ஆஸ்தீக புத்தி உண்டாகும். (திங்கள், செவ்வாய் சுபமாகும்.)

12. மீனம் – பூரட்டாதி ¼ – உத்திரட்டாதி – ரேவதி.

மீனராசி 9 பாதங்களும் பூர்ணமாக சுபத்தையே உண்டு பண்ணும். அடிக்கடி சுபமான செலவுகளும் சஞ்சாரபலனும் இருந்துகொண்டே இருக்கும். வித்யை விருத்தியாகும். மேலோர் பெரியோர்களின் அன்பினால் எல்லாம் சாத்தியமாகும். தெய்வபலம் முன்னின்றுகாக்கும் சுபம் உண்டாகும். (புதன், வியாழன் சுபமாகும்.)